# ஔவையார்

**பி. ஸ்ரீ.**

எழுதியவை

1. பொய்கை ஆழ்வார்
2. ஆண்டாள்
3. இலக்கியக் கட்டுரைகள்
4. மஹாபாரதக் கதைகள்

# ஒளவையார்

பி. ஸ்ரீ

முன்னுரை

பெ. நா. அப்புஸ்வாமி, பி. ஏ., பி. எல்.

அல்லயன்ஸ் கம்பெனி,

மயிலாப்பூர் : : சென்னை

காபிரைட்] [ரூ. 1

1944

பிரபல நாடக ஆசிரியா

**அ. கிருஷ்ணஸ்வாமி ஐயா**

**இயற்றிய நாடகங்கள்**

1. மீ ர ா ப ா ய
2. பீஷ்மா பிரமமசாபம
3. வாஸந்திகை
4. சபலை

ராஜன எலெகடரிக பிரஸ
சென்னை. (315/84451)

# முன்னுரை

ஒளவையைப் பற்றிய பல கதைகள் பரம்பரையாக நமது நாட்டில் வழங்கி வருகின்றன. அற்புத சக்தி வாய்ந்த ஒரு நெல்லிக்கனியைத் தின்று அவள் நெடுங் காலம் வாழ்ந்தாள் என்றும், சங்க நூல்களில் காணும் செய்யுள்களையும், ஆத்திசூடி கொன்றைவேந்தன் மூதுரை நல்வழி என்னும் நீதிச் செய்யுள் தொகுதிகளையும், நூற் றுக்கு மேற்பட்ட பலவகை விடுகவிகளையும் இயற்றிய ஒளவை ஒருத்தியே என்று பலர் இன்றும் நினைத்து வருகி றார்கள். சங்ககால ஒளவை வேறு, மூதுரையை இயற்றிய ஒளவை வேறு, கம்பன் காலத்தில் வாழ்ந்தவளாகக் கூறப் படும் ஒளவை வேறு என்பது உறுதி. வெவ்வேறு காலத் தினராகப் பல ஒளவைகள் இருந்திருக்க வேண்டும்; அல்லது, வெவ்வேறு காலத்தினராகிய பலர், தாம இயற்றிய பாட்டுக்களை ஒளவை என்ற ஒருத்தியே இயற்றியவையாகக் கற்பனை செய்திருக்கவேண்டும்.

இவ்வாறு பிறமொழிகளிலும் காணப்படுகிறது. பல புராணங்களையும் மகாபாரதத்தையும் இயற்றியதாகக் கூறப்படும் வியாசர் என்பவர் ஒருவரா பலரா என்ற கேள்வி நிகழ்ந்து, மேற்கூறிய முடிவையொத்த முடிவையே வடமொழி நூல் ஆராய்ச்சியாளர்கள் கொண்டிருக் கிறார்கள். இவ்வாறே கிரேக்க மொழியிலும், மிகச் சிறந்த கிரேக்க மகாகாவியமாகக் கருதப்படும், ‘இலியட்’, ‘ஆடிஸ்ஸி’ என்னும் இதிகாசங்களின் ஆசிரியரான ஹோமரைப் பற்றியும் இதே வகையான சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஹோமர் என்பர் ஒருவரா? அல்லது ஒரு கவிக்குழாமே ஹோமர் என்ற ஒருவராகப் பாவிக்கப்பட்டு-

வருகிறதா ?* என்பதைப்பற்றி இன்னும் மேல்நாட்டு அறிஞர்கள் சந்தேகப்பட்டுக்கொண்டே யிருக்கிறார்கள்.

ஔவையின் பாட்டுக்களாகக் கருதப்படும் விஷ கவிகள் யாவும் ஒருத்தியால இயற்றப்பட்டவையா, அன்றா என்பதை ஆராய்ந்து முடிவுகட்ட இயலாது. அவை யாவும் பல ஔவையார்களால் பாடப்பட்டன என்றே வைத்துக்கொண்டு, கற்பனையாக இயற்றப் பட்டது இந்நூல். பாட்டுக்களின் பொருளையே முக்கிய ஆதாரமாகக் கொண்டு, கதைத் தொடர்ச்சியை ஒருவாறு ஒழுங்குபடுத்தி, சில சந்தர்ப்பங்களும் நிகழ்ச்சிகளும் இதிலே கற்பனையாக அமைக்கப்பட் டிருக்கின்றன.

ஔவை என்னும் பெயரே ஒருத்தியின் இயற்பெயரா, அல்லது அவளுடைய வயதான நிலைமையினால அவளுக்குச் சூட்டபபட்ட காரணப் பெயரா என்பதைப பற்றியும் விவாதங்கள் இருககின்றன. ஔவை எனபது இவளுக் குப் பெறறோர் இட்டிருநத பெயர் அன்று, இவளைக் கலைமகளின் அவதாரம் என்று மதித்துப் பாராட்டிய ஜனங்கள் இவளை என்றும் பாட்டியாகவே பாவித்து இட்ட பெயரே என நணபர் பி. ஸ்ரீ. அபிப்பிராயப்படு கிறார்.

ஔவையாருடைய சிறந்த 'பாடலகள் நீண்ட கால வாழக்கையின் நிறைந்த அனுபவங்களான உண்மை-மணி களின் பொக்கிஷம.' தமிழ்ச் சுவையைத் தாம் அனுபவிக்கு மாறே பிறரையும் அனுபவிக்கச் செய்யும் விசேஷத் திறமை வாய்ந்த நண்பர் ஆசார்யா, தம் திறமையை இந் நூலின் ஒவவொரு பக்கத்திலும் காட்டி, இபபொககிஷதநி லுள்ள மணிகளை ஒவ்வொன்றாகப் பொறுக்கி யெடுத்துத் துலக்கிக் காட்டி நம்மை மகிழ்விக்கிறார். பழைய ஔவை புதிய ஒளியோடு சோபிக்கிறாள். சிறந்த கவிதை ஒரு

* It is doubtful if Homer was a person, or a literary syndicate.

காலத்தை மட்டும் சேர்ந்ததன்று; அது எல்லாக் காலங் களுக்கும் உரியது; என்றென்றும் புதியதாகவே காணப் படுவது என்னும உண்மையை நாம் நன்முக உணர்கிறேம்.

இம் முன்னுரையை எழுதுவதற்கு எனக்கு இருவகை யான உரிமை உண்டு. ஆசிரியர் நண்பர் பி. ஸ்ரீ. அவர் களும் நானும் உடன் படித்தவர்கள். பிரசுரகர்த்தர் நண் பர் குப்புஸ்வாமி ஐயரை சுமார முப்பத்தைந்து வருஷங் களாக நான் நனகு அறிவேன். நண்பர் குப்புஸவாமி ஐயர் யாதொரு இடையூற்றையும் பொருட்படுத்தாது, சிறிதும ஊக்கம குனமுது, சுமார் இருபத்தைந்து வருஷ காலம் நடத்திவந்த 'வவேக போதினி'ப் பத்திரிகை மூல மாகவும், அவர்கள் அப்போது பிரசுரித்துவந்த நீதி நூல் கள், மத நூல்கள், நாவல்கள், கதைத் தொகுதிகள் முத லிய பற்பல நூல்கள் மூலமாகவும் தமிழுக்குச் செய்திருக் கும் தொண்டு மிகவும் வியந்து பாராட்டுதற்குரியது. அவர்களுக்கும நாம் மிகவும் கடமைபபட்டிருக்கிறேம்.

இந்நூலிற போலவே, பழுஙகாலததுள்ள மற்றைய கவிகளேயும் நமக்கு அழகுற விளக்கிக் காட்டும் முயற்சி யில் நண்பர்கள் ஆசார்யாவும் குப்புஸ்வாமி ஐயரும் மேன்மேலும் ஈடுபடுவார்களாமுல், அது சிறந்த தமிழத் தொண்டு ஆகும். அம் முயற்சிக்கு வேண்டும் ஊக்கத்தை அளிப்பது தமிழ் மக்களுடைய கடமை.

பெ நா. அப்புஸ்வாமி.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1. | தமிழ்ப் பாட்டி | ... | 1 |
| 2. | பிறப்பும், வளர்ப்பும் | ... | 9 |
| 3, | நாலு கதைகள் | . | 15 |
| 4. | பாரியின் புதல்விகள் | . | 19 |
| 5. | ஔவையார் விருந்துண்ட வைபவம் | ... | 27 |
| 6. | கோரைக்காலாழ்வான் கொடை | ... | 34 |
| 7. | கலைக்கொடியும் கவிமலரும் | ... | 38 |
| 8. | பாட்டி சொல்லும் காதற்கதை | ... | 43 |
| 9. | ஔவையாரும் அசதிக்கோனும் | ... | 45 |
| 10. | தமிழக் காதலும் நாட்டுக் காதலும் | . . | 47 |
| 11. | பாட்டியார் தமிழ விருந்து | ... | 50 |
| 12. | பாட்டியின் உலகியல அறிவு | ... | 51 |
| 13. | கல்வியும் கவிதையும் | ... | 53 |
| 14. | ஔவையாரின் அரசியல் ஞானம் | ... | 56 |
| 15. | பழுதத அறிவு | .. | 59 |
| 16. | சஙகப் புலவர்களின் கர்வபஙகம | .. | 60 |
| 17. | நாவற்பழ விருந்து | ... | 61 |
| 18. | பாட்டியார் காட்டும் நீதிச்சுரங்கம | ... | 65 |
| 19. | வாக்கும் வாழ்க்கையும் | ... | 67 |
| 20. | என்றும் பாட்டிதான் | ... | 69 |
| 21 | கோயில் | ... | 70 |



அத்தனை ஆயுதங்களையும் கண்டு
அப்படியே பிரமித்துப் போய்விட்டாரா ?

# ஔவையார்

## I. தமிழ்ப் பாட்டி

அரசரோடு அரண்மனை யெங்கும் சுற்றி வருகிறார் அம்மையார். அங்கேயுள்ள பல வேறு காட்சிகளையும் காட்டி வந்தவன், கடைசியாகக் கிழவியைத் தன் ஆயுதசாலைக்கு அழைத்து வருகிறான். அந்தச் சாலையில் அணியணியாக வைத்திருக்கும் ஆயுத வகைகளை யெல்லாம் பெருமையோடு காட்டுகிறான். தன்னுடைய ஆயுத பலத்தைப் பாட்டி நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்பது அரசன் அபிப்பிராயம்.

### பாட்டியின் தூது

கிழவி வேறு யாருமல்ல; தமிழ் நாடெங்கும் பிரசித்தி பெற்ற தமிழ்ப் பாட்டியாகிய ஔவையார் தான். அதிகமான் என்ற அரசனுக்காகத் தொண்டைமான் என்ற அரசனிடம் தூது வந்திருக்கிறார். கடை ஏழு வள்ளல்கள் என்று பிரசித்திபெற்ற வள்ளல்களில் ஒருவன் அதிகமான்; வீரம் மிகுந்தவன்; ஔவையாரின் சிறந்த நண்பன். சேரரது உறவினன்; சேர நாட்டின் ஒரு பகுதியில ஆட்சி செலுத்தி வருகிறான். அவனுடைய முழுப் பெயர் அதிகமான் நெடுமானஞ்சி

**அதிகன்** என்றும், **அதிகமான்** என்றும் அவனைச் சொல்வதுண்டு. தொண்டைமான் காஞ்சீபுரத்தில் ஆட்சி செலுத்தி வருகிறான்.

அதிகமானோடு சண்டை செய்வதற்குச் சமயம் பார்த்திருந்தான் தொண்டைமான். இதை அறிந்த அதிகமான் தன் பலத்தைத் தூது மூலம் அறிவிக்க வேண்டி அந்த அரும்பெருங் காரியத்திற்குத் தகுதி யானவர், பாவன்மையோடு நாவன்மையும், அரசியல் அறிவோடு சமரஸ ஞானமும் படைத்த ஔவையாரே யென்று தீர்மானித்தான். தொண்டைமானும் தூத ராய வந்த புலவரின் பெருமையை உணர்ந்து உபசாரம் செய்து, தன் அரண்மனையிலேயே விருந்து சாப்பிட்டுத் தங்கியிருக்கும்படி வேண்டிக்கொண்டான்.

இப்படி ஔவையார் தங்கியிருக்கும்போதுதான் தொண்டைமான் அரண்மனைக் காட்சிகளைக் காட்டுவதுபோல் தன் ஆயுதங்களை யெல்லாம் காட்டி, ஔவையாரைப் பிரமிக்கச் செய்யலாம் என்று எண்ணினான். அந்த முயற்சியில் அனுகூலம் கிடைத்து விட்டால், தூது வந்த ஔவையாரே திரும்பிப்போய் அதிகமானைத் தனக்குச் சரணாகதி செய்யும்படித் தூண்டக் கூடுமல்லவா?

## பாட்டியின் பரிகாசம்

ஔவையார் என்ன செய்தார்? அத்தனை ஆயுதங்களையும் கண்டு அப்படியே பிரமித்துப் போய்விட்டாரா? தொண்டைமானைப் பார்த்து, "ஆம், இந்தப் போர்க் கருவிகளெல்லாம் அழகாய்த்தான் இருக்கின்றன; முழு ஆயுதங்களாய் அப்படியே பழுதில்லாமல் இருக்கின்றன! நல்லது இந்த அரண்மனை – அறைக் குள்ளே எண்ணெய் தடவி உறையிட்டுப் பூட்டி

வைக்கப்பட்டிருக்கின்றன; எங்கள் அதிகமானுடைய ஆயுதங்களோ முறிந்து போயச் செப்பனிடுவதற்காகக் கொல்லனுடைய உலைக்களத்திற்குப் போய்விட்டன!" என்ற கருத்தமைதத்து தொண்டைமானுடைய ஆயுதங்களைப் புகழுகிறவர் போலவும், அதிகமானுடைய ஆயுதங்களை இகழுகிறவர் போலவும் பாடினார்.

உண்மையில, ஔவையார் அதிகமானுடைய வீரத்தைப் புகழ்ந்து தொண்டைமானைப் பரிகசித்தார என்பது தொண்டைமானுக்கே விளங்கிவிட்டது. பல முறை போரில் உபயோகிக்கப்பட்டதால் அதிகமானுடைய ஆயுதங்கள் முறிந்தன என்பதும், தொண்டைமானுடைய போர்க் கருவிகளெல்லாம் போரில் பயன் படாமல் அலங்காரமாக அரண்மனைகளுவளே கொலுவைத்திருப்பதுபோல வைக்கப்பட்டிருக்கின்றன என்பதுந்தானே ஔவையாரின் குறிப்பு?

## பாட்டியின் கோபம்

முதல் முதல் ஔவயார் அதிகமானுடைய ஊரான தகடூரை அடைந்து அவனைப் பாடியதும், அவன் இவர்மீது பேரன்பு காட்டி உபசரித்தான்: ஆனல் பரிசு மட்டும் கொடுக்கவில்லையாம் ஏன்? "பரிசு கொடுத்தால் இவர் நம்முடைய ஊரை விட்டுப் போய்விடுவாரே! ஐயோ, இந்த அருமையான புலவரைப் பிரிய நேரிடுமே!" என்று பயந்துதான் பரிசு கொடுக்காமல் சில நாள் தாமதம் செயதான. ஔவையாரோ வளளலின் உட்கருத்தை யறியாமல், "என் தரத்தை அரசன அறிநதுகொள்ள வில்லையே!" என்று வருந்தித் தமமுடைய யாழ் முதலான இசைக் கருவிகளை மூட்டை கட்டிக்கொண்டு புறப்பட்டார்.

போகும்போது, ஔவையார் வாசல்-காப்பவனைக் கூப்பிட்டுத் தம் கருத்தை வெளியிட்டு, "இந்த உலகத்தில் அறிவும் புகழும் உடையவர்கள் அனைவரும் இறந்து போய்விடவில்லையே! இவன் இல்லாவிட்டால் எங்களுக்கு இடம் கிடையாதோ? இந்தத் தமிழ் நாட்டிலே தமிழைக் கொண்டு எந்தத் திசையிலே போனாலும், அந்தத் திசையில் எம்மை அன்போடு உபசரிக்கக் காத்திருப்பவர் எத்தனையோ பேருண்டு! இதை உன் அரசனுக்குத் தெரிவித்துவிடு" என்று கொஞ்சம் காரமாகவே சொல்லிவிட்டார். கடைசியாக அதிகமானுடைய யதார்த்த நிலையை அறிந்து கொண்டதும், அந்த அனைவையும் அருமையையும் வண்மையையும் வாயாரமனமார வாழ்த்திப் புகழ்ந்த வண்ணமாயிருந்தார்.

இவர்களுடைய பழக்கம் நாளடைவில் ஒப்பற்ற நட்பாகக் கனிந்தது. இந்த நிலையிலேதான் இவர் காஞ்சிபுரத்திற்குத் தூது போய் அதிகமானுடைய வீரத்தை வற்புறுத்தித் தொண்டைமானுடைய கர்வத்தை அடக்கிவிட்டுத் திரும்பினார்.

**'ஔவை உண்ட நெல்லிக்கனி'**

அதிகமான் ஔவையாருக்கு வேண்டுவன எல்லாம் அளித்து வந்ததோடு, அமிர்தத் தன்மையுள்ள நெல்லிப் பழம் ஒன்றையும் அளித்தானாம். அவன் எவ்வளவோ முயன்று அருமையாகப் பெற்றதாம் அந்த நெல்லிக் கனி. அதைச் சாப்பிட்டவர் நெடுங்காலம் உயிர் வாழ்வரென்று தெரிந்துதான் அரசன் அதை அவ்வளவு சிரமப்பட்டுப் பெற்றிருந்தானாம். தன் உயிரைக் காட்டிலும் ஔவையாரின் உயிர் அருமையானதென்று மதித்தே அதிகமான் அந்தக் கனியை

ஔவையாருக்குக் கொடுத்துவிட்டானும். இதைச் சுட்டி "ஔவை உண்ட நெல்லிக கனி" என்பர், திருக்குறளின் பிரசித்தி பெற்ற உரையாசிரியரான பரிமேலழகர்.

அரசன் தன்னைக காட்டிலும் தம்மை அதிகமாக் மதித்து நேசித்த அந்த நட்பை ஔவையார் மறக்கவே யில்லை. இவரும் அவனிடம் அன்பும் அருமையும் மிகுந்தவராய் அவனுக்கு உயிர்த் துணைவராயிருந்தார். அந்த வள்ளல் தன் பொருள் - வண்மையால் இவரை ஆதரித்தானென்றால், அருந் தமிழ்ச் செல்வராகிய இவரும் தம் கல்வி-வண்மையால் அவனை ஆதரித்தா ரெனச சொல்லவேண்டும்.

'ஔவை உண்ட நெல்லிக்கனி' ஔவையார் கவிதை யுலகில் அடைந்திருக்கும் அமரத் தன்மைககு அறிகுறி.

## பாட்டியின் வீரம்

ஒருசமயம் அதிகமானுக்கும், கோவலூரில ஆண்ட ஓர் அரசனுக்கும் போர் மூண்டது ஔவை யார் அந்தப் பகை யரசனிடத்திலும் தமது நண்ப னுடைய வீரப் பிரதாபததை வற்புறுத்திப் பணிந்து போகும்படி, புத்தி சொல்லிப் பார்த்தார். எதிரி இசை யாததால், அவனை வென்று கோவலூரையும் அதிகமான் தன்னுடைய ஆட்சிக்கு உட்படுத்திக் கொண்டான் ஔவையார் அந்த வெற்றிப் புகழை யும் பாடியிருக்கிறார்

## வீரத்தைப் பாராட்டும் வீரம்

அந்தப் போர் முடிந்து அதிகமான் ஔவையா ரோடு தகடூருக்கு வந்ததும், நீண்ட நாளாகப் பிள்ளை

யில்லாதிருந்த தனக்கு மகன் பிறந்திருக்கிறான் என்று தெரிந்து, போர்க் கோலத்தைக் களையாமலே வேக மாகப் போய் மகன் முகத்தைப் பார்த்து மகிழ்ந்தான். அப்போதும் ஔவையார் அந்த நண்பன் பக்கத்தி லேயே இருந்தார்.

அந்தக் காட்சியையும் ஔவையார் வியந்து பாடி யிருக்கிறார். "கையிலே வேல், காலிலே வீரக் கழல், கழுத்திலே எதிரியின் ஆயுதம் பாய்ந்த புண். அந்த எதிரியைச் சினந்து பார்த்த கண் அருமைக் குழந்தை யைக் கண்டும் அந்தச் சிவப்பு நீங்கின பாடில்லை. இப் படிப்பட்ட கோபத்திற்கு இலக்கான பகைவர் பிழைப் பதுமுண்டோ?" என்ற கருத்தமைந்த அந்தப் பாட் டிலும் அதிகமானுடைய வீரம் எவ்வளவு அருமை யாக—எவ்வளவு சாதுரியமாகச் சித்திரிக்கப்படு கிறது!

வேறொரு சமயம் பகைவர்கள் தகடூரை முற் றுகையிட்டு மதிலை வளைத்துக்கொண்டார்கள். அப் போது ஔவையார் தமது நண்பனை நோக்கி, "புலி சீறினால், எதிரே நிற்கக்கூடிய மான் கூட்டமும் உண்டோ? சூரியன் கொதித்தெழுந்தால், ஆகாயத்தி லும் திசைகளிலும் இருள் நிற்குமோ?" என்று உத்ஸாகமூட்டினார்.

உடனே அதிகமான் மதிலுக்கு வெளியே வந்து வெற்றிகொண்டு போர் செய்தான். பகைவர்களின் ஆயுதங்கள் முகத்திலும் மார்பிலும் கழுத்திலும் புண்படுத்தின. அந்தச் சமயத்திலும் ஔவையார் அதிகமானுக்கு அருகே வந்து உத்ஸாகப் படுத்தினார். அவன் தளராமல் போர்புரிந்து உயிர் துறந்தான்.

## பாட்டியின் சோகம்

அந்த வீர மரணத்தைக் கண்டதும், ஆருயிர நண்பரான ஔவையார் அடைந்த துயரத்திற்கு அளவுணடோ? அனபனுடைய குணங்களை யெல லாம் எண்ணி எண்ணிப் பிரிவாற்ருமல இவர் பாடிய பாடல்கள் படிப்பவர் நெஞ்சை உருக்குகின்றன.

இந்தப் பாடல்களின் மூலமாக, அம்பும் வேலும பறந்து திரியும் பண்டைக் காலப போர்க்களமும், அந்தக் களம முழுதும் திரிந்துகொண்டிருககும் அரச னுடைய வீரப் பொலிவும, போர் முடிந்ததும் அந்த வீரன் தனக்குப் பிரியமான உணவுவகைகளை முதல் முதல் ஔவையார் முதலான புலவர்களுக்கு அளித்து மகிழும வள்ளன்மையாகிய அன்புப் பணி யும், இனறும் நம் கண்முன் வருகின்றன.

இது மட்டுமா? இறந்துபோன வள்ளல் இநதப் பாடல்கள் மூலமாகச சாகா வரம் பெற்றுவிட்டான். அமிர்தத் தன்மைவாய்ந்த அந்த நெல்லிக் கனியை அவன் உணடிருந்தால்கூட நெடுங்காலந்தானே ஜீவித்திருகக முடியும்? 'ஔவை உண்ட நெல்லிக் கனி'யோ அவனுக்கும அமரத்வம் அளித்துவிட்டது!

அந்த வள்ளலின மார்பிலே தைத்த வேல், யாசகர் களின் கையிலும் தைத்து உருவிப் புலவா நாவிலும் போய் விழுந்தது!—என்று ஔவையார் பாடுகிருர். "எமக்கு ஆதாரமான தலைவன் எந்த இடத்தில் இருக்கிருனே? இனி இந்த உலகில்பாடுவாரும்இல்லை; பாடுகிறவர்களுககுக் கொடுக்கிறவர்களும் இல்லை! பிறரால் பறித்துச் சூடாமல் வீணுக அழியும பூவைப் போல், பிறருக்கு உதவாமல் இறந்துபோகும் உயிர்கள் பல: அப்படிப்பட்டவனு எமது அரசன?" என று

உருகுகிறார். ' நான உயிர் வாழும் நாளும் விரைவில ஒழிந்து போகட்டும்!" என்று கதறுகிறார். "தீயால் இவன் உடல் அழிந்தாலும், சூரியனைப் போன்ற புகழுடம்பு ஒருபோதும் அழியாது!" என்று ஆறுத நெஞ்சுப் புண்ணை ஆற்றிக்கொள்ளப் பார்க்கிறார். இப்படியெல்லாம் ஔவையார் புலம்பித்தவித்தாரென ருல், இந்தப் புலவருக்கும் அந்த வள்ளலுக்கும் உள்ள நட்பைச் சாதாரண நட்பு என்று சொல்லமுடியுமா?

## அதிகமானுடைய அருமை மகன்

'ஔவையார் - அதிகமான் நட்பு' என்று அந்த நட்பைப் பழைய தமிழுலகம்பிரசித்தமாகப் பாராட்டி வந்ததென்று கருதலாம். இத்தகைய நட்பினாலேயே அதிகமானுக்குப் பிற்காலத்திலும் ஔவையார் தகடூரிலே தங்கி அவனுடைய அருமை - மகன் முடிசூட்டிக்கொண்டதைக் கண்டு மகிழ்ந்து, அவனுக்குப் புத்தி சொல்லிக் கொண்டிருந்தார். போர்க் களத்திலிருந்து நேரே, போர்க் கோலத்தையும் களையாமல், அதிகமான் வந்து பார்த்தபோது ஔவயாரும் அவனுடன் வந்து பார்த்த அந்தக் குழந்தையல்லவா?

அந்த அருமைப் பிள்ளை அரசு வீற்றிருப்பதைக் கண்டதும், ஔவையாருக்கு அதிகமான் பிரிவால் ஏற்பட்ட மனப் புண்கூட ஒருவாறு ஆறியிருக்கும் என்று ஊகிக்கலாம். இவர் அந்த இளைஞனுக்குத் துணையாய்ப் பல ஆண்டுகள் அந்த ஊரிலே தங்கி இராஜ்ய காரியங்கள் இனிது நிறைவேறும்படி ஏற்பாடு செய்துகொண்டிருந்தா ரென்றும ஊகஞ் செய்யலாம். இந்த அரசனைக் குறித்தும் ஔவையார் பாடல்கள் பாடியிருக்கிறார்.

## வீரமும் அதிவீரமும்

பொதுவாக வீரத்தையும் தியாகத்தையும் புகழ்ந்து பாடியிருக்கும் ஒளவையாரையும் ஒரு வீரப் பெண்மணியென்றே சொல்லவேண்டும். பழந் தமிழ்ப் புலவர்களிற் பல வேறு குலத்தினர் உண்டு; குடியினர் உண்டு, தொழிலினர் உண்டு; ஆண்களும் உண்டு, பெண்களும் உண்டு. பெண்களும் வீரத்தைப் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள், வீரர்களா யிருந்திருக்கிறார்கள். இத்தகைய வீரப் பெண்மணிகளில் ஒளவையாருக்குச் சிறந்த ஸ்தானம் உண்டு.

வீர மன்னனாகிய அதிகமானுடைய நேசர், அதி வீரரான சிவநேசராகவு மிருந்தார் என்பது சைவர் களின் அபிப்பிராயம்.

# II. பிறப்பும் வளர்ப்பும்

**பகவன் என்ற பிராமணன் ஒருவன் காசி யாத்** திரை செய்து திரும்பி வருகையில் ஒரு சத்திரத்திலே சுந்தரவதியான ஒரு மங்கையைக் கண்டு காதலித்து மணந்துகொண்டான். மணம் நடந்த நாலாம் நாள் அவளைப் புலைச்சி யென்று தெரிந்து கைவிட்டுப் போக முயன்றான். அவளோ அவனைத் தொடர்ந்துபோய்க் கொண்டேயிருந்தாள்.

பிறகு அவர்கள், "ஓரிடத்திலும் நிலைத்திருந்து குடித்தனம் செய்யாமல் தேசாடனம் செய்து கொண்டே யிருப்போம்" என்று தீர்மானித்தார்கள். அந்தத் தீர்மானத்தோடு, "நமக்குப் பிறக்கும் குழந்தை களை நம்முடன் கொண்டுபோகக் கூடாது; பிறந்த குழந்தைகளைப் பிறந்த இடத்திலேயே விட்டுப்போக

வேண்டும்" என்ற நிலைந்தனை ஒன்றையும் பகவன் ஏற்படுத்தியிருந்தானும் அவர்களுக்கு ஏழு குழந்தைகள் பிறந்தன என்றும், முதலில் பிறந்த குழந்தைதான் ஔவையார் என்றும் ஒரு கதை பிரசித்தமாக வழங்குகிறது.

## ஔவைக் குழந்தை

முதலாவது குழந்தை பிறந்ததும் பகவன் அந்தக் குழந்தையைப் பாராமலே பிரயாணப்பட்டானும். ஆனால் தாய், பிள்ளை பாசத்தால் பிரிய மனமில்லாமல் மயங்கி நின்றாள். உடனே அது—ஔவைக் குழந்தை யல்லவா?—தாய்முகம் நோக்கி,

இட்டமுடன் என்தலையில் இன்னபடி யென்றெழுதி
விட்டசிவ னும்செத்து விட்டானோ?—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரம்அவ னுக்(கு)அன்னாய்!
நெஞ்சமே! அஞ்சாதே நீ

என்ற ஒரு வெண்பாச் சொல்லி ஆதியை உத்ஸாகப் படுத்திவிட்டதாம்.

இந்தக் கதை அதிகமானையும் ஔவையாரின் சகோதரனாகக் குறிப்பிடுகிறது; வேறொரு சகோதரர் திருவள்ளுவரென்றும், இன்னும் ஒரு சகோதரர் கபிலரென்றும் தெரிவிக்கிறது; வள்ளி உப்பை உறுவை ஆகியவர்களை ச சகோதரிகளாகவும் பிரஸ்தாபிக்கிறது.

## கபிலரகவல்

கபிலர் பெயரால் 'கபிலரகவல்' என்று ஓர் அகவல் வழங்கிவருகிறது. இந்த அகவல் மேலே சொன்ன கதையில் வரும் வரலாற்றைத் தழுவி அமைந்திருக்கிறது.

அருந்தவ மாமுனி யாம்பக வற்குக்
கருவூர்ப் பெரும்பதிக் கண்,பெரும் புலைச்சி

ஆதி வயிற்றினில் அன்றவ தரித்த
கால்முளை யாகிய கபிலனும் யானே!
என்னுடன் பிறந்தவர் எத்தனை பேரெனில்,
ஆண்பால் மூவர், பெண்பால் நால்வர்.
யாம்வளர் திறம்சிறி(து) இயம்புவல், கேண்மின்:
ஊற்றுக் காடெனும் ஊர்தனில் தங்கியே
வண்ணார் அகத்தினில் உப்பை வளர்ந்தனள்,
காவிரிப்பூம் பட்டினத்தில் கள்விலைஞர் சேரியில்
சான்றார் அகம்தனில் உறுவை வளர்ந்தனள்;
நரம்புக் கருவியோர் நண்ணிடு சேரியில்
பாணர் அகத்தினில் ஔவை வளர்ந்தனள்,
குறவர் கோமான் கொய்தினைப் புனம்சூழ்
வண்மலைச் சாரலில் வள்ளி வளர்ந்தனள்,
தொண்டைமண் டலத்தில் வணதமிழ் மயிலைப்
பறைய ரிடத்தில் வள்ளுவர் வளர்ந்தனர்,
அரும்பார் சோலைச் சுரும்பார் வஞ்சி
அதிகன் இல்லிடை அதிகமான் வளர்ந்தனன்,
பாரூர் நீர்நாட் டாரூர் தன்னில்
அந்தணர் வளர்க்க யானும் வளர்ந்தேன்

[பெரும் பதிக்கண் - பெரிய ஊரில், பெரிய ஊரிலுள்ள. கால் முளை - மகன். இயம்புவல் - சொல்வேன். கேண்மின் - கேளுங்கள். கள் விலைஞர் - கள் விற்கிறவர். நரம்புக் கருவியோர் - நரம்பினால் செய்த கருவிகளை யுடையவர். கோமகன் - தலைவன். மயிலை - மயிலாப்பூர்.]

என்று கபிலர் பேசுகிறாராம் 'கபிலரகவல்' வாயிலாக

இந்த அகவல் சங்கப் புலவரான கபிலர் வாக்கு அன்று என்பதற்கு இதன் நடையே போதுமான சாட்சி. பிற்காலத்துப் புலவர் ஒருவர் கபிலர் பெயரால் இந்த நூலைப் பாடிவைத்தார் என்பது திண்ணம். தாம், கபிலர் ஔவையார் முதலானவர்களைக் குறித்துக்

கேட்டிருந்த கதையையே இவர் மேலே சொன்ன படி, குறிப்பிட்டிருக்கிறார். இதிலிருந்து, இந்த நாளில் தமிழ்ப் பொதுஜனங்களிடையே வழங்கும் கதை ஸாராம்சத்தில் அந்நாளிலும (அதாவது, 'கபிலரகவல்' ஆசிரியர் காலத்திலும) வழங்கி வந்ததென்று தெரிகிறது.

## ஞானாமிர்தம்

பிராமணன் ஒருவன் புலைச்சி ஒருத்தியை மணந்து ஔவையார் முதலாக ஏழு பிள்ளைகளைப் பெற்றெடுத்தான என்ற கதை கபிலரகவலுக்கும முற்பட்ட ஒரு பழைய கதையென்று கருதுவோரும் உண்டு. இவர்கள் '**ஞானாமிர்தம்**' என்ற ஒரு சைவ சித்தாந்த நூலைத் தங்கள அபிப்பிராயததிறகு ஆதாரமாகக் காட்டுகிறார்கள. இந்த நூல் சுமார் நானூறு ஆண்டுகளுககு முற்பட்டதென்று தெரிகிறது.

**யாளிதத்தன்** புலைச்சியை மணநது இவ்வுலகில் கீர்த்திபெற்ற இனிய ஏழு பிளளைகளைப் பெற்றதாக 'ஞானாமிர்தம்' தெரிவிககிறது. யாளிதத்தன் என்ற பிராமணன் ஒரு புலைச்சியைப் பிராமண ஸ்திரீ யென்று கருதி மணந்து கபிலர் முதலிய பிள்ளைகள் எழுவரைப பெறறதாக ஞானாமிர்த உரைகாரர் தெரிவிக்கிறார். யாளிதத்தனே பகவனென்றும, அந்தப் புலைச்சி ஆதிதானென்றும் கருதுவது சரி யென்றால், ஔவையார் முதலானவர்களின் பிறப்பு வரலாற்றைப பற்றிய கதை குறைந்த பட்சம் சுமார் நானூறு வருஷங்களாக நமது நாட்டிலே வழங்கி வருகிறதென்று ஊகிக்கலாம.

## வளர்ச்சியும் அறிவு வளர்ச்சியும்

இவர்களில் ஔவையார் பாணர் சேரியில் வளர்ந்தார் என்பது கர்ண பரம்பரையாக வழங்கி வரும் கதை. இதைத்தான் கபிலரகவலும்,

நரப்புக் கருவியோர் நண்ணிடு சேரியில்
பாணர் அகத்தினில் ஔவை வளர்ந்தனள்

என்று பிரஸ்தாபிக்கிறது. 'நரப்புக் கருவியோர்' யாழ் முதலான இசைக் கருவிகளைக் கையில் ஏந்திப் பாடிப் பிழைக்கும் பாணர்களே. இவர்கள் பழந் தமிழக் குடிகளைச் சேர்ந்த வகுப்பினர். முற்காலத்தில் பாணர்கள் கல்விகேள்விகளில் சிறந்தவர்களாய்ச் செய்யுள் செய்வதிலும் வல்லவர்களா யிருந்தார்கள். இவர்கள் அந்தப் பாடல்களை இசையோடு பாடுவார்கள். பாணர்கள் பிற்காலத்தில் தாழ்ந்த வகுப்பினராக ஒதுக்கி வைக்கப்பட்டார்கள்.

பாணர் குடியைச் சேர்ந்த ஔவையார் அதிகமானிடம் தம்மை "விறலி" யென்று தெரிவித்துக் கொண்டார். "விறலியர்" என்றால், மெய்ப்பாடு (அபிநயம்) தோன்ற ஆடலும் பாடலும் வல்லவர். ஔவையார் இளமையிலேயே இயற்றமிழ்க் கல்வியில் பயிற்சி பெற்றிருந்ததுடன், "பாணர் விறலியர்" என்ற குலத்துக்குரிய இசைத் தமிழிலும் நாடகத் தமிழிலும் நன்கு பயின்று தேர்ச்சி பெற்றிருந்ததாகவும் ஊகிக்கலாம். தமிழகத்திலுள்ள இராஜ சபைகளிலும் பிற இடங்களிலும் தம் புலமைத் திறமையையும், ஆடல் பாடல்களின் திறமையையும் வெளிப்படுத்தி அரசரும் பிறரும் மனமுவந்து அளிக்கும் பொருளைப் பெற்று வாழ்ந்து வந்தாரென்றும் கருதலாம்

## உடன் பிறந்தவர்களா?

ஔவையாரின் சகோதரிகளில் உறுவை ஒருத்தியென்று 'கபிலரகவல்' சொல்லுகிறதல்லவா? உறுவையை முறுவை யென்று குறிப்பிடுகிறது ஒரு பழைய வெண்பா. அந்த வெண்பா ஔவையாரின் வேறொரு சகோதரியான வள்ளியைக் குறவர் பாவை யென்று குறிப்பிடுகிறது. குறவர் வளர்த்ததால் இவள் குறவர் பாவை யென்றும், வள்ளி யென்றும் பெயர் பெற்றிருக்கலாம்.

குறவர் கோமான் கொய்தினைப் புனம்சூழ
வணமலைச் சாரலில் வளளி வளர்ந்தனள்

என்று கபிலரகவல் கூறும் குறப் பாவையும் ஔவையாரின் சகோதரியுமான வளளி வேறு, முருகக் கடவுளை மணந்த வள்ளி வேறு என்றே கதை கட்டியவர்களும் கருதியிருக்கவேண்டும். மற்றப்படி, இவர்களைக் குறித்து நமக்கு என்ன தெரியும்? 'வண்ணார் அகத்தினில' வளர்ந்த உப்பையைக் குறித்தும் நமக்கு விசேஷமாக ஒன்றும் தெரியவில்லை.

எனவே, 'உலகில் இனிய கீர்த்தி பெற்ற எழுவர்' என்று ஞானமிர்தம் குறிக்கும் சகோதர சகோதரிகளில் ஔவையார், அதிகமான், கபிலர், வள்ளுவர் என்னும் நாலவரே உண்மையில் தமிழுலகம் போற்றும் நல்லிசை வாய்ந்தவர்கள் பழந் தமிழ் நூல்கள் இந்த நாலவரையும் விசேஷமாய்ப் பிரஸ்தாபிக்கின்றன. இவர்கள் நால்வரும் உடன்பிறந்தார் என்ற கதையின் உண்மை எப்படி யிருந்தபோதிலும், ஔவையாரும் அதிகமானும் கபிலரும் ஒரு காலத்தவர் என்பது திணணம்.

## III நாலு கதைகள்

### வழிப்பறி செய்த வள்ளல்

தன்னுடைய ஊருக்கு வரும்போதெல்லாம் அந்தச் சிற்றரசன் பரிசுகள கொடுத்து உபசரிப்பான. அன்பு மிகுதியால், "பாட்டியம்மா! நீ எபபோதும் இங்கேயே இருககவேணும்" என று வேண்டிக் கொள்வான்.

ஆனல் இந்தப் பாட்டியால் அபபடி ஒரே இடத்தில இருகக முடியுமா? நாடோடி யல்லவா? அந்த வளவன்மையைப் புகழ்ந்து பாடிவிட்டு அப் படியே புறப்படுவாா ஒளவையாா அவனும் இவரைச் சிவிகைமேல் ஏற்றிவைத்து வணங்கி வழியனுப்பு வான். ஆனல நாட்டின் எல்லையைக் கடக்குமுன், "ஐயோ! திருடர்கள பொருள்களை யெல்லாம் பறித்துக்கொண்டு போய்விட்டாாகளே!" என்று பாட்டியார் திரும்பிவிடுவாா.

இவர் தன்னிடம் வநது குறை கூறுவதைக் கண்டு அவன் முன்னேயிலும் அதிகமாய்ப் பரிசுகள் அளித்துப் பாடலகள் கேட்டு மகிழ்வான் இபபடி இரணடு மூன்று தடவை நடநத பிறகு, வள்ளல் மிகவும் விசனம் அடைநததாகச சொலலி, விசாரணை நடத்திக் குற்றவாளியைக் கண்டுபிடிப்பதாக வாக்களித்தான்.

ஆனல் அநத விசாரணை விரைவில் முடியவில்லை; நீண்டுகொண்டே போயிற்று. அது முடியும் வரை ஒளவையார் அந்த ஊரிலேயே தங்கவேணடிய தாயிறறு. அப்படித் தங்கிய காலத்தில் ஒவ்வொரு நாளும் தமிழ்ப பிரசங்கங்கள் செய்து அவனை மகிழ் வித்துச கொண்டிருப்பார்.

கடைசியாக விசாரணை முடிந்ததும், அரசன்—என்ன ஆச்சரியம்!—"முதற் குற்றவாளி நானதான்!" என்றே ஒப்புக்கொண்டானும். ஔவையார் அந்த ஊரில் இருக்க மறுத்ததால், இவரை அத்தனை நாள் வைத்துக்கொள்ளவே அந்த யுக்தி செய்ததாகவும் சொல்லி, இவரிடம் மன்னிபபுக் கேட்டுக்கொணடு விசேஷமான பரிசுகளோடு அனுப்பி வைத்தான்.

அந்தப் பரிசுகளைக் காட்டிலும் பாரி எனற அந்த வள்ளல் செய்த வழிப்பறி, இதயததிலுள்ள அன்பை யும் ரஸிகத் தனமையையும் அப்படியே வெளியிட்ட தெனறு கருதிய ஔவையார் அந்த நிகழச்சியை மறக்கவே யில்லையாம

அதிகமானுக்கு அடுததபடியாக, இந்த "வழிப் பறிவள்ள"லான பாரியின் நட்பையும் ஔவையார் பெருநட்பாக மதித்திருந்தாரெனறு சொல்லலாம். இவனும் கடையெழுவள்ளல்களில் ஒருவன். இவன தான் கபிலரையும் ஆதரித்தவன். இவனுடைய பறமபு நாடு தான இக்காலததுப பிரான்மலை என்கிறார்கள

## அன்பிற்கு அடிமை

பாரியின பறம்பு நாட்டை விட்டுப் புறப்பட்டவர், பழையனூர் எனனும் கிராமத்தில் புன்செயப் பயிர் செய்யும காரி யென்ற வேளாளன் ஒருவனைச சந்தித் தார். எளியவனுனுலும் அனபிலே காரியும் பாரிக்குக் கொஞசமும் குறைந்தவனில்லை; அவனும் ஔவை யாரிடம் பெரு நட்புக்கொண்டு இவரைப் பிரிய விரும்பவில்லை. ஆனல் "அது நடக்கிற காரிய மில்லையே!" என்று எண்ணி, ஒரு நாளாவது இவரைத் தாமதித்துப் போகச்செயய விரும்பி, அவனும் ஒரு யுக்தி செய்து பாாத்தானும்.

மாலைப்போதிலே களை பறிக்கும் கருவி யொன்றை இவர் கையில் கொடுத்து, "அம்மா பாட்டி! தயவுசெய்து நான திரும்பி வரும்வரை இந்தக் கொல்லையிலுள்ள களைகளை எடுத்துக்கொண் டிரும்" என்று சொல்லிவிட்டு வெளியே போனுன். போனவன் இரவில் அகாலத்திலேதான வந்து சேர்ந் தான். "இனிமேல் ஔவையார் எங்கும் போக மாட் டார்; போக முடியாது!" என்ற சந்தோஷத்தோடு, தான் குடிக்கும் கஞ்சியைத் தனக்காக அடிமை போல் உழைத்துக் கொண்டிருந்த ஔவையா ரோடு பங்கிட்டுக் கொண்டு தமிழ்ப் பாடல்களைக் கேட்டு ரஸித்தான் அந்த இரவெல்லாம். பாரியின் வழிப்பறியைப்போல் காரியின் களைக்கோலையும் இவர் மறக்கவேயில்லை.

## "ஔவையே! வாராயோ?"

அப்பால் ஒருநாள் ஔவையார் சேர மன்ன னுடைய அரண்மனையை அடைநதார். அநத அரசன் ஒரு விருந்து நடத்தினுன். அனபராகிய ஔவையாரும் விருந்தினர்களோடு பந்தியில் உட்கார்ந்திருநதார். அப்பொழுது திடீரென்று வேறொரு விருந்தாளி வந்துவிட்டார். பந்தியிலே வேறு இடமில்லை; யாரேனும் ஒருவரை எழுப்பித்தான் புதிய விருந் தாளிக்கு இடம் கொடுககவேண்டியதாயிற்று.

சேர மன்னன் யாரை எழுப்பத் துணிந்தான், தெரியுமா? "ஔவையே! வாராயோ?" என்று கூபபிட்டானும். "இப்படி ஔவையாரைப் பகிரங்க மாய் அவமதிதது விட்டானே நமது அரசன!" என்று வருநதினுர்கள் பந்தியிலுள்ள அனைவரும்.

ஔவையாருக்கோ கொஞ்சமும் வருத்தமில்லை; அமைதியாக எழுந்திருந்தார். சேரன் தன் அரண்மனைக்குள்ளே போய்விட்டான். அவனுடைய அந்தரங்க விசுவாசத்தையும் சிநேகத்தையும் மதித்திருந்த ஔவையார், அந்த உட்கருத்தையும் அறிந்து கொண்டு அவனைத் தொடர்ந்து போனார்.

பிறகு அரசனும் அம்மையாரும் தனிமையாக ஓரிடத்திலே அமர்ந்து உத்ஸாகமாய்ப் பேசிக் கொண்டே போஜனம் செய்தார்கள். "ஔவையே! வாராயோ?" என்று சொந்தம் பாராட்டிச் சேரன் அழைத்த அந்த வார்த்தையையும் ஔவையாரால் மறக்கவே முடியவில்லையாம்.

## நீலச் சிற்றாடை

பிறகு ஒரு சமயம் ஔவையார் தமது வழக்கப்படியே பாதசாரியாக யாத்திரை செய்துகொண்டிருக்கையில், பெருமழை பெய்து உடம்பும் உடையும் நனையவே, குளிரால் வருந்திக்கொண்டே நடந்து கொண்டிருந்தார்.

வழியிலே ஏழைப் பெண் ஒருத்தி ஒரு சிறு பரணமேலிருந்து தினைக் கொல்லையைக் காத்து வந்தாள். ஔவையாரைக் கண்டதும் அழைத்து உபசரித்து, "பாட்டியம்மா! உம்முடைய ஈர ஆடையைக் களைந்து அது உலரும் வரையும் இந்த என் சிற்றாடையை உடுத்திக்கொள்ளும்" என்று சொன்னாள்.

இந்த அன்பைப் பெரிதும் பாராட்டினார் பாட்டியார். பாரியின் அருமையான அந்த வழிப்பறியோடும், காரியின் அருமையான அந்தக் களைகோலோடும், சேரனுடைய அருமையான அந்த வார்த்தையோடும் இந்த நீலச் சிற்றாடையையும்

ஒப்பிட்டுப் பார்த்தார். அந்த வியப்பும் பழைய ஞாபகங்களும் பின்னிப் பிணைந்து புறப்பட்டன ஒரு பாட்டாக

பாரி பறித்த பறியும், பழையனூர்க்
காரிஅன்(று) ஈந்த களைக்கோலும்,—சேரமான்
'வாராயோ?' என்றழைத்த வார்த்தையும்,—இம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர்.

## IV பாரியின் புதல்விகள்

மேலே சொன்னபடி நீலச் சிற்றாடை கொடுத்து உதவியவர் இருவரென்றும், அவர்கள் பாரி என்ற வள்ளலின் புதல்விகளென்றும், ஔவையார் சந்திக்கும் காலத்தில் பரம ஏழைகளா யிருந்தார்களென்றும், சிற்றாடை கொடுத்து உதவியதோடு நெருப்பு மூட்டிக் குளிர் காயச் செய்தார்களென்றும், பசி தீர உணவளித்தார்களென்றும், ஔவையார் அவர்களில் ஒருத்திக்குக் கல்யாணம் செய்வித்தாரென்றும் கதைகள் வழங்குகின்றன.

இப்படிப்பட்ட கதைகளிலிருந்து ஔவையாருடைய — அன்பும் பணிவும் கலந்து பரிமளிக்கும் — அருமையான இதயத்தையும், வசீகர சக்தியையும், செல்வாக்கையும், அருள் நிறைந்த தோற்றத்தையுங் கூட ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாமல்லவா?

### கீரை-விருந்து

பாரியின் பெண்கள் வறுமையில் ஆழ்ந்து வேலை செய்து பிழைத்துக் கொண்டிருந்த காலத்தில், அன்பு - நிலயமான தங்கள் குடிசையில் ஔவையாருக்குப் புசி தீரக் கேழ்வரகுக் களியுடன் கீரை-விருந்து செய்தார்களாம். அந்த விருந்தையும் ஔவையாரால்

மறக்கவே முடியவில்லை. அதுதான் தமது நீண்ட ஆயுளில் கிடைத்த விருந்துகளி லெல்லாம் மிகச் சிறந்ததென்று ஔவையார் கருதினாராம

## கீரையா, அமிர்தமா?

என்ன திவ்யமான கீரை! சுட சுடப் பரிமாறுகிறாகள். என்ன வாசனை, என்ன சுவை! நெய்யும கலந்திருக்கிறது; கருகிப் போகாமல் நிறம் பசந்து பக்குவமாய்ச் சமைத்திருக்கிறது. பாரியின் புதல்விகள்; இப்போது ஏழைப் பெண்கள் இவர்கள் நெஞ்சிலேதான் எவ்வளவு அன்பு; நாவிலே என்ன உபசாரம்! உணண உண்ணாத தெவிட்டாத இக் கீரையை—'கம்' என்று பரிமளிக்கும கீரையை—அனபு பரிமளிக்கும் நெஞ்சோடு இப் பெண்மணிகள் பரிமாறுகிறார்கள். இந்த அழகை — இந்த அருமையை—எவ்வாறு வியப்பது; எவ்வாறு போற்றுவது?

இவ்விதமாக நினைத்துக் கொண்டிருந்த ஔவையார் திடீரென்று கற்பனைக் கண் கொண்டு பார்க்கிறார். "எல்லாம சரிதான் ஆனால்—ஆ! ஆ!—இதோ கண்டு கொண்டேன், என்னையும் ஏமாற்ற முடியுமா? பொய்யாகக் கீரை யென்று சொன்னார்கள். என்ன மாயம்; என்ன ஜாலம்! அமிர்தத்தை யலலவா அள்ளி அள்ளிப் பரிமாறிவிட்டார்கள் இப் பெண்கள், வளையல் அணிந்த தங்கள் அருமைக் கையினால்?" என்றெல்லாம் உள்ளம் நெகிழ்ந்து உருகிப் போகிறார்.

## ஔவையாரின் பாடல்—விருந்து

இத்தகைய உணர்ச்சிகள் ஔவையார் உள்ளத்தில் ஊறிப் பெருகுகின்றன இநத ஊற்று, நாதத்

தோடு பொங்கி யெழுந்து ஓர் அழகிய பாட்டாக வெளிபடுகிறது.

இதுதான:

> வெய்தாய், நறுவிதாய், வேண்டளவும் தின்பதாய்,
> நெய்தான் அளாவி நிறையிட்டுப் - பொய்யே
> அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்,
> கடகம் செறிந்த கையார்.

[வெய்தாய - சூடாய. நறுவிதாய - பரிமளிப்பதாய. அடகு - கீரை. கடகம - வளை. செறிந்த - பொருந்திய]

என்ற அழகான வெணபா.

இந்த வெண்பா, ஔவையார் அனுபவித்த கீரை-விருந்தை எவ்வளவு ஆச்சரியமாய்க் காட்டுகிறது, பாருங்கள்! சூட்டோடு 'கம்' எனறு பரிமளிக்கும் கீரை, அதைப் பரிமாறும் வளைக கையோடு அப் படியே படம் பிடிக்கப் பெற்று நம் கண்முன் வரு கிறது! பாட்டின் சுவையும் மனோபாவமும ஓசை யினபத்தோடு, — அந்த இதயங்களோடு அன்பும், அந்தக் கைகளோடு வளைகளும் இசைந்திருப்பது போல—இசைந்து, ரஸிகர் உள்ளத்திற்குத் தெவிட் டாது தித்திக்கும் அமுதமாகின்றன.

இத்தகைய பாடல்—விருந்துகளிலே, தமிழ் நாட்டிலுள்ள ஏழை மக்களின் பொனனுள்ளத்தை யும், நம தமிழ்ப் பெருங கிழவியின் குழந்தை யுள்ளத் தையும் ஒருங்கே காணும பாக்கியம் பெறுகிறோம்.

இந்தக் கீரை விருந்தை இப்படியெல்லாம் அனுப வித்து மகிழ்ந்த ஔவையார், பாரி மகளிரின் நிலை கண்டு இரங்கி அவர்களில் மூத்த பெண்ணைத் **தெய் விகன்** என்னும் அரசன் ஒருவனுக்கு மணஞ் செய் வித்து மகிழ்ந்தாரென்று சொல்லுகிறார்கள்

## பாரியின் துரதிர்ஷ்டம்

பாரி என்ற வள்ளலின் புகழ், நாளடைவில் சேர சோழ பாண்டியர் என்ற தமிழ் மூவேந்தரின் புகழை யும் வென்றுவிட்டது. "பாரி ஒரு சிற்றரசன்தானே! நாம் பேரரசர்களல்லவா? அவனுடைய புகழை அடக்கிவிடுவோம்" என்று அந்த அரசர்கள் பொறா மையோடு படையெடுத்து வந்து பாரியின் பறம் பாகிய மலையரணை முற்றுகையிட்டார்கள். முற்றுகை நெடுங் காலம் நடைபெற்றது. இந்த நிலையில் ஒரு சமயம் பாரி தன் மலையரணுக்குள் உணவுக்கும் வழி யில்லாமல் எவ்வளவு கஷ்ட ஜீவனம் செய்துகொண்டி ருந்தான் என்பதை ஔவையாரே பாடியிருக்கிறார்.

## அவனுடைய பெண்கள்

பாரி பெரு வள்ளலாயிருந்ததுபோல் மகாவீர னாகவும் இருந்தான். அவனுடைய போர்த்திறமைக் குப் பேரரணாக இருந்தது அந்த மலையரணல்ல; ஔவையாரின் சகோதரரென்று கருதப்படும் கபி லரின் அறிவுத்திறமை என்ற அந்த அரண்தான்! "ஔவையார்-அதிகமான் நட்பு" என்று சொல்வது போல், "பாரி-கபிலர் நட்பு" என்று சொல்வதும் பிர சித்தமானது அத்தகைய நண்பரான கபிலரின் உதவி பெற்ற பாரியை 'முடியுடை மூவேந்தர்' என்று சொல்லப்பட்ட சேர சோழ பாண்டியர்கள் சேர்ந்து முயன்றும் வெல்ல முடியவில்லை. எனவே, அவர்கள் பாரியை வஞ்சித்துக் கொன்றுவிட்டார்கள்.

அச்சமயம் பேரன்பினரான கபிலர் பாரியின் அருமைப் புதல்வியரை அப்பறம்பிலிருந்து அழைத் துக் கொண்டுபோய் மணஞ்செய்து கொடுக்க முயன் றார். பாரியின் பகைவர்களாயிருந்த பேரரசர்களுக்கு

அஞ்சிச் சிற்றரசர்களில் பலரும் அவர்களை மணஞ் செய்துகொள்ள உடன்படவில்லை.

கடைசியாக அவர்களைக் கபிலர் தமக்கு வேண்டியவர்களான சில பிராமணர்களிடம அடைக்கலமாக வைத்துவிட்டுத் தம ஆருயிர்த் தோழனாயிருந்த பாரியின பிரிவுக்கு ஆற்ருமல் உயிர் துறந்தாரென்று **புறநானூறு** என்னும சங்க நூலிலிருந்து தெரியவருகிறது. பிறகு பாரி மகளிர் பரம ஏழைகளாய்ப் பாடுபட்டுப் பிழைத்து வந்தார்களென்றும், அந்நிலையில் ஔவையார் அவர்களைச் சந்தித்து அவர்களில தமககையைத் திருக்கோவலூரில் ஆண்டு வந்த சிற்றரசனுககு மணஞ் செய்வித்தா ரென்றும் கதை வழங்குகிறது.

## அங்கவையும் சங்கவையும்

பாரி மகளிருள் ஒருத்தியைத் திருககோவலூர் மலையமான் என்ற அரசனுக்குக் கபிலரே மணம புரிவித்தா ரென்றும், பிறகு அவர் தீப்பாய்ந்து உயிர துறந்தா ரென்றும் திருககோவலூர்ச் சாஸனம் ஒன்று தெரிவிக்கிறது. பாரி மகளிரில் இளையவளுககே கபிலர் மணஞ் செய்வித்தாரென்று ஊகிக்கலாம்.

அங்கவையைக் கொள்ள
அரசன் மனம் இயைந்தான்

என்று ஔவையார் பாட்டொன்றில் வருவதால், பாரி மகளிரில் **அங்கவை** என்பவளுக்கே ஔவையார மணம் முடிப்பித்தா ரென்றும் கருதலாம்.

அங்கவை பாரியின் மூத்த மகள் என்றும், இளைய மகளின் பெயர் **சங்கவை** யென்றும் சொல்லுகிறார்கள். பிராமணர்களிடம் ஒபபிக்கப்பட்ட இவ்விரண்டு பெண்களும் கஷ்ட ஜீவனஞ் செய்து காலம

தள்ளி வந்தாக வென்றும், அந்த நிலையிலேதான் ஔவையார் மூத்த பெண்ணான அங்கவைக்கு மணம் செய்வித்தாரென்றும், அப்பால் மணம் முடியாமல் இருந்த சங்கவைக்குக் கபிலர் மணம் முடிப்பித்து உயிர் துறந்தாரென்றும் ஊகஞ் செய்கிறார்கள்.

## அங்கவை திருமணம்

அங்கவை திருமணம் தமிழர்களின் மனோபாவத்திலே ஓர் அதிசயமான கதையாக வளர்ந்துவிட்டது. கலியாண ஓலை ஔவையார் சொல்லியபடி விநாயகக் கடவுளாலேயே எழுதப் பட்டதாம். ஔவையார் கட்டளை யிட்டபடி வனதேவதை ஒன்று அந்தத் திருமணப் பத்திரிகையை மூவேந்தர்களின் கைகளில் கொண்டுபோய்க் கொடுத்ததாம். அப்படிப்பட்ட அழைப்பிற்கு இணங்காமலிருக்க முடியுமா? அந்தப் பேரரசர்கள் மூவரும் தங்களுக்கும் பாரி குடும்பத்திற்குமுள்ள பழைய விரோதத்தையும் ஒருவாறு மறந்து, சதுரங்க சேனை சூழத் திருக்கோவலூருக்கு வந்து சேர்ந்தார்களாம்.

அவர்களில் பாண்டிய மன்னன் ஔவையாரின் விருப்பத்திற்கு இணங்கி அந்தக் கல்யாணத்திற்கு வேண்டுவன கொண்டு வந்திருந்தான். ஔவையாரும் கல்யாணத்திற்கு இன்றியமையாத காரியங்களையெல்லாம் முன்கூட்டியே சித்தம் செய்வித்திருந்தார்.

அந்தக் கல்யாணத்திலே பாலும் நெய்யும் தண்ணீர் பட்டபாடு பட வேண்டுமென்று கருதிய ஔவையார், **பெண்ணை** நதியே பாலும் நெய்யுமாகப் பெருகி வரவேண்டுமென்று கட்டளை யிட்டாராம். ஔவையார் கட்டளை யிட்டபடியே அந்த ஆற்றில் தண்ணீருக்குப் பதில் நெய்யும் பாலும் வெள்

ளமாக வந்துவிட்டனவாம். அந்தப் பாலாற்றையும் நெய்யாற்றையும் அப்படியே கல்யாணப பந்தலுக்குள்ளே திருப்பிவிட்டார்க ளென்றால், "விருந்து வெகு சம்பிரமம்" என்று சொல்லவா வேண்டும்?

கல்யாணச் செலவுக்குப் பணம் வேண்டுமல்லவா? "வருணன் கருணை செய்ய வேண்டும்" என்றாராம் ஔவையார். "இப்போது மழை எதற்காக?" என்று எல்லோரும் அதிசயித்துக் கொண்டிருக்கும்போதே, மழை கொட்டத் தொடங்கிவிட்டதாம். ஆனால்—என்ன அற்புதமான மழை!—பொன் மழையாகவே பொழிந்து தள்ளிவிட்டானும் வருணன், - "இந்தப் பொன் மாரியும் போதும் போதும்!" என்று சொல்லும்படி. இனி "விவாகம் வெகு சம்பிரமாக நடந்தேறியது" என்று சொல்லவா வேண்டும?

## பனம்பழ விருந்து

எனினும் ஔவையார் வெகு விநயமாகப் பேரரசர்களை நோக்கி, "என் அப்பன்மார்களே! நீங்கள் மூவரும இந்தக் கிழவியைக் கௌரவித்தீர்கள்; இந்த ஏழை இட்ட அற்ப உணவையும உண்டு களித்தீர்கள்!" என்று சொன்னாராம அதுகேட்ட அரசர்களோ கர்வத்தோடு பரிகாசமாய், "பாட்டியம்மா! பாலும் நெய்யும தெவிட்டிப் போய்விட்டன; ஆனால் பழம தெவிட்டவில்லை. எத்தனையோ பழவகைகளையும் ருசி பார்த்துவிட்டோம். பனம்பழம் ஒன்றுதான் பாக்கி! அந்தக் குறைதான ஏன் இருக்கவேணும்?" என்றார்கள்.

அது பனம்பழம் கிடைக்கும காலமன்று. பாரி குடும்பத்தின மீது அவர்களுக்குள்ள பழைய துவேஷத்தை முற்றும் மறக்க முடியாமல், தங்களை அவ்

வளவு தூரம இழுத்துக் கொணர்ந்த அநதக் கிழவியை யும் அவமானப்படுதத வேணுமெனறுதான் அவர்கள் அப்படிச் சொன்னுர்கள்.

ஔவையாரோ அநத நோக்கத்தைப் பளிச் சென்று உணாந்துகொண்டு அவர்களைக் கர்வ பங்கம் செய்து மறுபடியும புத்தி கற்பிகக எண்ணி அஙகே உலர்ந்து கிடந்த ஒரு பனந்துண்டத்தை நோக்கி,

திஙகட் குடையுடைச் சேரனும்
சோழனும் பாண்டியனும்,
மஙகைக்(கு) அறுகிட வந்துநின்
மூர்மணப பநதரிலே
சஙகொக்க வெணகுருத(து) ஈன்றுபச
சோலை சலசலத்து,
நுங்குக்கண முற்றி அடிக்கண்
கறுதது நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழம்தர
வேணடும், பனந்துணடமே!

என்று ஒரு பாட்டுச் சொன்னர்.

உடனே அந்தப் பனந்துணடமும் ஔவையார் கட்டளைப்படியே குருத்து விட்டு வளர்ந்து பச்சோலை சலசலக்கப பனம் பழங்களைத் தலையாலே தாங்கி நினறதாம், அந்த 'முடியுடை மூவேநதர்'களின் கண்முன்னே. அது கண்டு அவாகள் வெட்கமும் ஆனந்தமும் அதிசயமுமம ஒருங்கே அடைநதவர்க ளாய் விடைபெற்றுக்கொண்டார்களாம்.

இத்தகைய தெய்வத் தன்மை வாய்ந்த செயல் களால் ஔவையாா திருககோவலூர்த் தெய்விகன் என்ற அரசனுக்கும், பாரிமகளான அங்கவைக்கும் மணஞ் செய்வித்து மகிழ்ந்திருந்தாராம்

## V. ஒளவையார் விருந்துண்ட வைபவம்

ஒரு நாள் ஒளவையார் பாண்டிய ராஜாவின் அழைப்பிற்கு இணங்கி அந்த அரண்மனையில் நடந்த ஒரு கல்யாணத்திற்குப் போயிருந்தார். அரண்மனையில் எள்ளுப் போடவும் இடமில்லை· அவ்வளவு கூட்டம். ஒளவையார் வழக்கம்போல் ஏழைகள் தரிக்கும் புடைவையே தரித்திருந்தார். அங்கேயிருந்த அதிகாரிகள் இவரை அறிந்துகொள்ளவில்லை.

இந்நிலையில் தமக்குக் கிடைத்த இராஜ விருந்தை இவர் எவ்வளவு அழகாக வருணிக்கிறார், பாருங்கள் :

வண் தமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்(து)
உண்ட பெருக்கம் உரைக்கக் கேள் — அண்டி
நெருக்குண்டேன், தள்ளுண்டேன், நீள்பசியி னாலே
சுருக்குண்டேன், சோறுண்டி லேன் !

[வழுதி - பாண்டியன.]

"நெருக்குண்டேன், தள்ளுண்டேன், பசியால் சுருக்குண்டேன். ஆனால் சோறுண்டேனில்லை ! இது நான் ராஜ கல்யாணத்திலே விருந்துண்ட வைபவம் !" என்று ஒளவையார் சொல்வதைக் கேளுங்கள். தமிழில் தேர்ச்சி பெற்ற தமிழ் மன்னனுடைய அரண்மனையிலே தமிழ்ப் பாட்டிக்குக் கிடைத்த அனுபவம் இதுவென்றால், தமிழுக்குச் செவியில்லாத அரசர்கள் பிரபுக்கள் முதலானவர்களைக் குறித்து என்ன சொல்வது ?

### ஆளுக்கு விருந்தா ? ஆடைக்கு விருந்தா ?

இந்நாளிலும் ராஜ விருந்துகள் முதலான நாகரிக விருந்துகளில் கலந்துகொள்வோருக்கு, "ஆளுக்கு விருந்தா ? ஆடைக்கு விருந்தா ?" என்ற சந்தேகம்—

ஔவையாருக்குப் பாண்டியன் அரண்மனையில் அந் நாளிலே தோன்றிய அதே சந்தேகம்—தோன்றுவது இயல்பு தொப்பி அல்லது தலைப்பாகை, கழுத்துச் சுருக்கு, மேற்சட்டை, காற்சட்டை, ஜோடு முதலியன அணிந்து செல்லாதவர்கள் பெரிய விருந்துகளில் கலந்துகொள்ளும் பெருமையையும உரிமையையும ஒருங்கே இழந்துவிடக் கூடுமெனறால், இந்த 'நாகரிக யுக'த்திலே நாம் ஆடைகளுககு எவ்வளவு பக்தி செலுத்துகிறோம் எனபதை எளிதில ஊகித்துக் கொள்ளலாமல்லவா?

ஆனால் இவ்வாறு ஆடையை மதிக்கும் நாகரிக சம்பிரதாயம் இக்காலத்திற்கே சிறப்பாக உரியதன்று. இது ஔவையார் காலத்திலும் இருந்தது அரண் மனைகளில் விசேஷமாய்க் காணப்பட்டது; பிரபுக் களின் மாளிகைகளிலுமகாணப்பட்டது செல்வர் களான குடியானவர் வீடுகளிலும் சில சமயஙகளில் காணப்பட்டது.

## 'அன்பில்லாள் இட்ட அமுது'

ஔவையார் பிரயாணம் செய்துகொண்டிருக்கை யில் ஓர் ஊருக்கு வந்து அந்த ஊரில் செல்வனாயிருந்த குடியானவன் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து இளைப்பாறிக் கொண்டிருந்தார். அவன் நல்லவன்; ஆடையைப் பார்த்து ஆளை ஒதுக்கி விடாமல் ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்ய வேண்டுமென்ற விருப்பமுள்ளவன். ஆனால அவன் மனைவி மிகப் பொல்லாதவள் "ஏழைகளுக்கு என்ன விருநது வேண்டியிருக்கிறது? கொடுத்து வைத்திருககிறார் களா?" என்று கூசாது கேட்கும் ஆடம்பரக்காரி.

வீட்டிலிருந்து குடியானவன் வெளியே வருவதைக் கண்ட ஔவையார், "அப்பா! என் பசி தீரச் சிறிது உணவு அளிப்பாயோ?" என்று கேட்டார். மனைவியின் குணத்தை அறிந்தவனாகையால், அவன் ஔவையாரை வெளியில் இருக்கச் சொல்லிவிட்டு வீட்டுக்குள்ளே போனான். போனவன் மனைவி அருகில் அமர்ந்து அவளுக்குத் தொண்டு செய்து கொண்டே சமயம் பார்த்து, "பெண்ணே! ஒரு தொண்டு கிழவி நமது திண்ணையில் பசியோடிருக்கிறாள்" என்ற செய்தியை அவள் காதில் மெள்ளப் போட்டான். அவளும் ஔவையாரை ஒரு பார்வை பார்த்தாள். ஆடையைப் பார்த்து ஏழையென்று தீர்மானித்துக் கொண்டாள்.

"பிறகு என்ன நேர்ந்தது? அவன் அந்தப் பெண்-தெய்வத்திற்குப் பயபக்தியோடு என்ன தொண்டு செய்தான்?" என்ற விவரங்களை ஔவையார் வாக்கு மூலமாகவே தெரிந்துகொள்வோம்:

இருந்து முகமதிருத்தி ஈரோடு பேன்வாங்கி,
விருந்துவந்த தென்று விளம்ப, - வருந்திமிக
ஆடினாள், பாடினாள், ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்!

அந்தப் பாட்டைக் கேட்டதும், ஔவையார் ஒரு கவியென்று குடியானவனுக்குத் தெரிந்துவிட்டது. "இவர் வாக்கால் பாடல் பெற்றால், பொருள் இன்னும் அதிகமாய்ப் பெருகும்" என்ற பேராசையுடன் அவனுடைய மனைவியும் ஔவையாருக்கு அன்னமிட்டாள். ஆனால் ஔவையாரோ,

காணக்கண் கூசுதே; கையெடுக்க நாணுதே,
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே,-வீணுக்கு, என்

என்பெலலாம் பற்றி எரிகின்ற தையையோ,
அன்பில்லாள இட்ட அமுது!

என்று அந்த ஆகாரத்தை வெறுதது ஒரு பாட்டுச் சொல்லிவிட்டுச சாப்பிடாமலே எழுந்து போயவிட்டாா.

## பூதன் செய்த அன்பு-விருந்து

அன்பையும் வள்ளன்மையையும் அரண்மனை களில் கண்டாலும், குடிசைகளில் கண்டாலும் பாராட்டிப் பாடிஞா ஔவையாா. பெண்ணை யாற்றங் கரையிலுள்ள புல்வேளூர் என்னுமிடத்தில் பூதன் என்ற ஒருவன் ஆடையை மதியாது ஆளை மதித்து ஔவையாருக்கு உணவளிததான்.

அந்த அனபு-விருந்தை ஔவையாா,

வரகரிசச சோறும், வழுதுணங்காய் வாட்டும்,
முரமுரவென் றேபுளிதத மோரும், - பரிவுடனே
புல்வேளூர்ப் பூதன் புகழ்புரிந்(து) இட்டசோ (று)
எல்லா வுலகும் பெறும்

என்று சிறப்பித்துப் பாடியிருக்கிறுர்.

"உலகத்தையெல்லாம் விலையாக எழுதிக்கொடுக்கலாமே!" என்று மதிக்கத்தக்க இத்தகைய மெய் யன்பைஔவையார் இராஜ மாளிகைகளைக் காட்டி லும விசேஷமாக ஏழைகளின் குடிசைகளிலே கண் டார் என்று சொல்லலாம். அரசர்களும் பிரபுக்களும் தானே அதிக அளவில் 'மேலாடை நாகரிக'த்தை மதிக்கக் கூடியவர்கள்?

ஔவையாரோ ஆடையை மதிக்கும் உலகியல்-அறிவை மெய்யறிவென்று ஒப்புக்கொள்ளாத மெய்ப புலவா கூட்டத்தைச் சேர்ந்தவரல்லவா?

## குருடும் செவிடும்

சிங்காசனத்தின்மீது கொலு வைத்த தங்கப பொம்மைபோல வீற்றிருக்கிறான் ஓர் அரசன். இரத்தின விளக்குகள் ஜாஜ்வல்யமாயப் பிரகாசித்து இரவைப் பகலாக்குகின்றன. எனினும் இந்தக கிழவி அங்கே வந்துசோர்ந்தது தெரியவில்லை!

## குருடுதானா?

தனக்குக கண்கள இருந்தும், அந்தக் கண்களை விழித்திருந்தும், இந்தப் பாட்டியை அறிந்திருநதும், அந்த அரசன் இப்பொழுது இவரைப் பார்ககவில்லை. தகதகவென்று கண்ணைப் பறிக்கும் ஆடையாபரணங்களைச் சுமந்து கொண்டு, "போற்றி! போற்றி! ஜய, ஜய, போற்றி!" என்று தன்னைப போற்றி நிற்கும் தொநதிப் பிரபுக்களின கூட்டத்திலே, தேகப்பருமனும் இல்லாமல், சாதாரண உடையோடு தலை நிமிர்ந்து நிற்கும கிழவியைப் பார்க்கத் தெரியுமோ அந்தக் கண்களுக்கு? "குருடனுக்கு ராஜவிழி விழிக்கத் தெரியுமா?" என்று கேட்பதுண்டு. ஆனால் ராஜ விழிகளுக்குக் குருடாயிருக்கவும தெரியுமே!

பாட்டியார் ஒரு பாட்டைப் பாடுகிறார்; பொருளும் சொல்லுகிறார் "காதிலே போட்டுப பார்க்கலாம்!" — என்று எண்ணம். ஆனால் ஓடும் நீரை ஓட்டைக் குடத்திலே போட்டு வைப்பதுண்டோ?

## பாவம்: செவிடுங்கூட!

அந்த அனுபவம் ஔவையாரின் உள்மனத்திலே ஒரு பாட்டாக விளைநதது. இவா அச் சபையிலே அந்த அரசன முன்பே இந்தப் புதிய பாட்டை அரங்கேற்றினார்:

இருள்தீர் மணிவிளக்கத(து) ஏழிலார் கோவே!
குருடேயும் அன்றுநின் குற்றம்,—மருள்தீர்ந்த
பாட்டும் உரையும் பயிலா தனஇரண்(டு)
ஓட்டைச செவியும் உள!

[ஏழிலார் - ஏழில் என்ற மலை நாட்டில் வசிப்பவர்கள். கோவே - அரசனே. மருள் - மயக்கம். பயிலாதன - பழகாதன.]

"அரசே! நீ குருடு என்றுதான் முதல் முதல் நினைத்தேன். அப்படி நினைத்தது தவறு: இப்போது தெரிந்துவிட்டது, நீ செவிடுங்கூட என்று! பாட்டும் பொருளும் பயிலாத இரண்டு ஓட்டைச் செவிகளும் உனக்கு இருக்கத்தான் செய்கின்றன! ஆனால் அந்த ஓட்டைச் செவிகளையும் செவிகளென்று சொல்லலாமா? அப்படிச் சொல்லுவது கேவலம் உபசாரம் தானே?" என்று இடித்துரைத்தார், ஔவையார் அந்த மலைநாட்டரசனை நோக்கி.

## மருள் தீர்க்கும் மருந்து

இந்த ஔவை-வாக்கு ஓர் அழியாத சித்திரம். இதில், செவியில்லாத 'சேஷர்'களும் கண்ணில்லாத திருதராஷ்டிரர்களுமாயிருந்த அரசர்கள், பிரபுக்கள், செல்வர்கள் முதலானவர்கள் பரிகசிக்கப் படுவதுடன், கவிதை முதலியவற்றைக் கேட்டு ரஸிக்கத் தக்க கேள்விச் செல்வம் மருள் தீர்த்து மெய்யறிவை அளிக்கும் மருந்து என்ற உண்மையும் அழகாக வற்புறுத்தப்படுகிறது.

## 'நெஞ்சும் இல்லையே!'

மேலே சொன்னபடி குருடும் செவிடுமா யிருந்த சில 'பெரிய' மனிதர்கள் ஒரு நாள் ஔவையாரிடம் வந்து, "நாங்கள் உமது வாயால் பாடல்பெற விரும்பு

கிறோம்; ஆகையால் எங்களைப் பாடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள்

"இவர்களிடம் வீரம் இல்லை; உள்ளத்தில ஈரமும் இல்லை; ரஸிகத் தன்மையும இல்லை! இவர்கள் போர்க் களத்தைப் பார்க்கவும் பயந்தவர்கள்; சங்கீதம, பாட்டு முதலியவற்றைக கேட்கவும பயம்! ஐயோ, இவர்களுக்குக கண்ணுமில்லை, காதுமில்லை; இரக்கப்படுவதற்கு நெஞ்சும இல்லையே! ஆனால் வாயுண்டு, வயிறுண்டு. ஏன்? உடம்பெல்லாம் வயிறு தான்! உணவின் சுவையிலேயே ஈடுபட்டுத தமிழ்ச் சுவையைக் கொஞ்சமும் அறியாமல இருக்கிறார்கள்! இந்த மூட சிகாமணிகளான பிரபு சிகாமணிகளுக்கு நான எப்படிப் பாடல்விருந்து செய்வது?" என்று ஔவையார் திகைத்துப போனா

## என்ன திகைப்பு: என்ன பாட்டு!

இந்தத் திகைப்பே ஒரு பாடலாக வெளிப்பட்டது இந்தப பாடலையே இவர் அவர்களுக்கு ஆப்பணம் செய்தார.

மூவர் கோவையும, மூஇளங கோவையும்
பாடிய என்தனை பாவலான், 'எமமையும்
பாடுக' என்றனிர!
நும்மைஇங(கு) எங்ஙனம் பாடுகேன் யானே?
ஒளிறுபடு வேலையை கண்ணில் காணீர்,
வெளிறுபடு நல்யாழ விரும்பிக் கேளீர;
புலவர் வாய்சசொற் புலபபலுக்(கு) இரங்கீர்!
............ ...... ... ......
அவிசசுவை அல்லது தமிழச்சுவை கொள்ளீர்!
ஒவ்வாக் கானத்(து) உயர்மரம பழுத்த
துவ்வாக் கனியென தோன்றிய நீரே!

[மூவர் கோவையும்-மூன்று பேரரசர்களையும் மூஇளங்கோவையும் - அந்த மூவேந்தர்களின் இளவரசர்களையும். பனுவல் - பாட்டு. களிறு - யானை. செங்களம் - இரத்தத்தால் சிவந்த போர்க்களம். வெளிறு படு - குற்றம் அல்லது அறியாமை ஒழிந்த. யாழ் - வீணை போன்ற இசைக் கருவி. அவி - (இங்கே) சோறு. கானம் - காடு. துவ்வாக் கனி - சாப்பிட முடியாத பழம்.]

“ தமிழ் நாட்டு முடிமன்னர் மூவரென்றும், பெரு வள்ளல்களென்றும் பிரசித்திபெற்ற சேர சோழ பாண்டியர்களையும், அந்த நாடுகளிலுள்ள இளவரசர்களையும் பாடிய என் பாட்டு உங்களையும் பாடுமோ?” என்று சொல்லும்போதும், மயக்கத்தைத் தீர்க்கும் பாட்டும் பொருளும் பழகாத காதுகள் என்று ரஸிகத் தன்மையில்லாத மலை நாட்டரசனைக் குறிப்பிடும் போதும் ஔவையார், கவிதையைக் குறித்தும் கவிஞன் தொழிலைக் குறித்தும் எவ்வளவு உயர்ந்த அபிப்பிராயத்தை வெளியிடுகிறார்! இந்த அபிப்பிராயத்திலும், இதற்கு இணங்க இவர் நடந்துகொண்ட முறையிலும், இவருடைய உயர்ந்த குணாதிசயம் வெளிப்படுகிறதல்லவா?

## VI. கோரைக்காலாழ்வான் கொடை

ரஸிகத் தன்மையோடு, தேவை அறிந்து உடனே கொடுத்து உதவுவதையே கொடை யென்று கருதியவர் ஔவையார். “ அடுத்து அடுத்துப் பின் சென்றால் ஈவது காற்கூலி”—அதாவது, அடிக்கடி போய்க் கேட்பதற்காகக் கொடுப்பது கொடையன்று; கால் நடந்ததற்காகக் கொடுக்கும் கூலிதான்!—என்கிறார்.

‘நாளை, பின்னே’ என்று ‘வாய்தா’ போடுகிறவர்களையும் இவர் கொடையாளிகளென்று ஒப்புக்

கொள்ளமாட்டார். "நாளை, பின்னை" என்ற சொற்களைக் காட்டிலும் 'இல்லை' என்ற சொல்லே இனிது— என்பர் :

வாதவர்கோன் 'பின்னை" என்றான், வத்தவர்கோன்
['நாளை' என்றான்;
யாதவர்கோன் 'யாதொன்றும் இல்லை' என்றான்.—ஆதலால்
வாதவர்கோன 'பின்னையினும்,' வத்தவர்கோன 'நாளை'
யாதவர்கோன 'இல்லை' இனிது! [யினும்,

## கோரைக்காலாழ்வான்

கோரைக்காலாழ்வான் ஒரு பிரபு, பெருஞ்செல்வன்; பரம லோபி. ஒருவருக்கும் ஒரு காசும் கொடுக்க மாட்டான். எனினும 'இல்லை' என்று சொலவதேயில்லை! அப்படி ஓரே அடியாக மறுத்து விடுவது தன்னுடைய பிரபுத்வத்திற்கு அழகாகாது என்று நினைத்தான. ஆகவே, 'நாளை' 'பின்னை' என்ற சொற்களைத் தாராளமாக உபயோகிக்கத் தொடங்கினான் நாளடைவில் அந்தச் சொற்களை உபயோகிப்பதில் நிபுணனாகி விட்டான். அதனால் 'கொடையாளி' யென்றும் பேர் பெற்றான்.

அவன் ஒரு நாள் ஔவையாரைக் கண்டதும் ஆளைத் தெரிந்துகொணடு, "இந்தக் கிழவி நம்மை வசை பாடிக் கெடுத்துவிடலாகாது சாமார்த்தியமாக இவளை ஏமாற்றிவிட வேணும" என்று சங்கற்பஞ் செயதுகொண்டு, "ஔவைப் பாட்டியே! உமக்கு நான் நாளை ஒரு யானையை வெகுமதியாகக் கொடுப்பேன்" என்று சொன்னான்.

### என்ன கருணை! ஆ, என்ன தியாகம்!

"இவன் அவ்வளவு பெருங்கொடையாளியா?" என்று அதிசயித்த ஔவையார் மறு நாள் வந்தார்.

பிரபு சிரித்துக்கொண்டே, "பாட்டியாரே! யானை கட்டித் தீனி போட உம்மால் முடியுமா? தயவு செய்து நாளை வாரும்: அழகான ஒரு குதிரை தருவேன" என்றான்.

ஔவையார மறுபடியும் வந்துசேர்ந்தார். அப்போது ஆழவான், "குதிரை வைத்து ஆளுவதும் கிழவியாகிய உமக்கு வீண் கவலைதானே? ஆகையால் ஒரு நல்ல எருமை மாடு தருவேன்; தயிருக்கும நெய்க்கும கவலையில்லை; தாராளமாய்ச் சாப்பிடலாம். தெரிகிறதா? நாளை வாரும்" என்றான.

ஔவையார் மறுபடியும் சந்தித்தபோது, "அம்மையாரே! எருமைப் பாலும தயிரும் இந்த வயசில் எப்படி உமக்கு ஜீரணமாகும்?" என்று கவலை தோய்ந்த முகத்துடன் கேட்டுவிட்டு, அடுத்த நாள் எருமைக்குப் பதிலாக எருது கொடுப்பதாய்க கருணை கூர்ந்து வாககளித்தான் கோரைக்காலாழ்வான்.

மறு நாளும் பிரபுவுக்குப பாட்டியிடம் கருணை தான்! என்ன? அந்தக் கருணைக்கு முடிவே யில்லையா? "கிழவியே! காளை மாடு—ஐயோ!—முட்டித் தள்ளி விடுமே? நாலு முழப் புடவை கிடைத்தால் போதாதா, நீர் இருக்கிற லட்சணத்திறகு?" என்று கேட்டு விட்டானும்.

"நல்லது, நல்லது, அதைத தான் கொடுக்கப் போகிறானு? பார்க்கலாம்" என்று சோதனை பார்த்தார ஔவையார் ஒரு கிழிந்த துண்டுகூட அவன் கொடுக்கமாட்டான் என்று தெரியவந்தது.

## கொடையும் தேய்ந்து காலும் தேய்ந்தது!

"பின்னே, பினனே! என்று 'வாய்தா' போட்டுக் கொணடே போனானும். அப்படிபபட்ட 'வாயதா'க்

களால் ஏற்படும் லாபந்தான் அவனுககு நன்ருய்த் தெரியுமே ! யானைக் கொடை குதிரைக் கொடையாகி, எருமைக் கொடையுமாகி, எருமையும் எருதாகிப் புடைவையாகி, அந்தப் புடைவையும் நாளடைவில் உபயோகத்தால் அல்ல—திரி திரியாயத் தேய்ந்து மாய்ந்தது : ஒளவையார் காலும் ஓய்ந்து தேய்ந்து போயிற்று ! இபபடிப் பாட்டிக்குப் பாத பரீட்சையும், பிரபுவுக்கு இருதய பரீட்சையும் நடநது முடிந்தன !

அந்தக் கொடை விசேஷத்தை ஒளவையார்,

கரியாய்ப் பரியாகிக காரெருமை தானாய்,
எருதாய், முழுப்புடவை யாகித்—திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றுமிகத் தேயந்துகால் ஓய்ந்ததே,
கோரைக்கால் ஆழ்வான கொடை !

[கரி - யானை. பரி - குதிரை. காரெருமை - கருமையான எருமை.]

என்று அருமையாகச சிறபபித்திருக்கிருா ஒரு வசைக் கவியிலே.

கோரைக்காலன கொடை தேரைக்கால் பெற்று வரும் விந்தையையும், தேரைக் காலும் தேய்ந்து தேய்ந்து முடிவில் ஓய்ந்து மாயமாகும் விநதையையும் பார்த்தீர்களா ? பிரபுத்வம விளங்கும் அருமைத் திருவாயால் 'இல்லை' என்று ஆதியிலே சொல்லி விடாமல் 'கரி' என்றும 'பரி' யென்றும், எருமையென்றும் எருதென்றும், 'நாளை நாளை' என்றும், 'பின்னே பின்னே' யென்றும், ஆசை காட்டி மோசம் செய்து, அந்ததிலே 'உய்த்துணர வைத்தல்' என்னும் உத்தியால் (யுகதியால்) 'இலலை' என்பதை யாசகனே கண்டுபிடித்துக் கொள்ளும்படி விட்டு விடுகிறது,

இந்த வித்தையின் விசேஷம, இந்தக் கொடையின் தனிபெருஞ் சிறப்பு!

### ஒருவன் அல்லன்!

கோரைக்காலாழ்வான ஒருவன் அல்லன்; ஓர் ஊரன் அலலன்; ஒரு காலத்தில, ஒரு தேசததில் மட்டும் இருந்தவனும் அலலன். ஆழ்வாாகள் பன்னிரண்டு பேர ஆனல் கோரைக்காலாழ்வார்கள் இத்தனை பேர் என்ற கணககு இல்லை! தற்கால நாகரிக நாஸதிக உலகிலும் எததனையோ கோரைக்கால்-ஆழ்வாாகளை நாம் தரிசனம செய்துதான் வருகிறேம்!

அவாகள் பிரபுககளாகவும் பெருஞ் செல்வர்களாகவும தரிசனம் தருகிருர்கள்; முடி மன்னர்களாகவும் தரிசனம் அளிக்கிறார்கள், வர்த்தக மனனாகளாகவும் காட்சி கொடுக்கிறார்கள். மதி மந்திரிகளாகவும் வருகிறார்கள்; ராஜ தந்திரிகளாகவும் திரிகிறார்கள், தியாக துரைகளாகவும் தங்களை விளம்பரப்படுத்திக கொளளுகிறார்கள! ஔவையாரின் 'கோரைக்காலாழ்வான்' எத்தனை வகையான 'பெரிய' மனிதர்களின் அருமைப் படம்!

## VII. கலைக்கொடியும் கவிமலரும்

அககாலத்தில்,—அதாவது கோரைக்காலாழ்வான் இருந்த காலத்திலேயே—பொருட் செல்வத்தோடு செவிச் செல்வமும படைத்த அரசர்களும் பிரபுக்களும் இநநாட்டில் இருந்தார்கள் அவாகளில் ஒருவனது உள்ளம் எப்பொழுதும் அழகுக கலைகளையும் அறிவுக் கலைகளையும் தழுவி வளர்நதது. பண்டைத் தமிழகத்தில் தமிழரது பெரு வாழ்விலே பூத்துச் செழித்த இலக்கிய நறுமலர்கள், அவனது வாழ்க்

கையை நீங்காது சூழ்ந்து பரிமளித்துக் கொண்டிருந்தன. அவனது வள்ளன்மை உத்தமக் கவிஞர்க்கும் கலைஞர்க்கும் ஓர் ஊன்றுகோலாக உதவியது.

## அரசனது ரஸிகத் தன்மை

கொஞ்ச காலமாக அந்த அரசன் புதியதொரு நல்ல பாட்டைக் கேட்டு இன்புற வேண்டுமென்று ஆசை கொண்டிருந்தான். ஆஸ்தான வித்வான்களும் பிறரும் பாடிகொண்டுதான் இருந்தார்கள், ஆஸ தான மணடபம் அதிரும்படி. எல்லாம் வெறும் சொல்லடுக்குகள், மோனைகள், பிராசஙகள் !

கவிதைக்கு அலந்துபோன அவனுள்ளத்திலே புதியதோர் ஆலோசனை பிறந்தது அதறகிணங்க அவன தன் ஆஸ்தான மண்டபத்தில் ஒரு பொற்கிழி தூக்கி, அதைத் தன் உள்ளத்திற்கு அமுதமாகிய ஓர் அருங்கவி பாடும் புலவருக்குப் பரிசாக அளிப்பதாய் நாடெங்கும் பறையறைவித்தான்.

அரசன் ரஸிகனுக இருநததால் அப்பொறகிழியை அழகுபெற அமைந்துள்ள லட்சுமி - சிலையொன்றின் கரத்திலே திகழச் செய்தான். லட்சுமி தேவி உயிரோவியமாகச் சித்திரிக்கப் பெற்றிருந்தாள்.

செநதாமரைப் பூவில் அத்தேவி கொலுவிருக்கிருள் என்று புராணம் சொல்லுகிறதல்லவா? "ஆம்; அதோ அலையெறிந்து கொண்டிருக்கும் அந்தக் குளிர்ந்த நீர்ப் பரபபிலே, இப்போது தலையசைந்து கொண்டிருக்கும் அந்த இனிய பூவிலேதான் கொலுவிருககிருள் ! பொன்னரசியல்லவா ? பொற்கிழியும் கையுமாக எதிர் நோக்கி இளநகை யரும்புகிருள்,— அப்படியே அதைக் கொடுக்கப் போகிறவளைப் போல் !" என்று மயங்கினர்கள், கொலு மண்டபத்

தின் அந்தப் பகுதியை நோக்கியவர்களெல்லாம். "அது தண்ணீர்தான்; அதோ அலேகள்!" என்று பிரமிக்கும்படி அந்தத் தடாகமே அவ்வளவு அழகாய்ச்சித்திரிக்கப்பட்டிருந்தது.

பொன்னரசியின் கையிலிருந்து பொற்கிழியைப் பெறவேண்டும் என்ற பேராசை பிடர் பிடித்துத் தள்ள, எத்தனேயோ புலவர்கள் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இச்சபா மண்டபத்திற்கு வந்துசேர்ந்தார்கள். அரசன் அவர்களே உபசரித்து, அவர்கள் பாடும் பாடல்களை ஆவலோடு கேட்பான்.

ஆனல் அப்பாடல்களில் ஒன்றும் அவனுள்ளத்திற்கு ஆறுதல் அளிக்கவில்லே. "இச்சொற் குப்பைகளிலே உண்மை - மணி ஒன்றேனும் காணப்படவில்லேயே!—என்று அரசன் அலுத்துச் சலித்துப் பெருமூச்செறிவான். வந்த புலவர்களெல்லாம் விதியை நொந்துகொண்டு வீடுபோய்ச் சேர்வார்கள்,—" ஐயோ நமக்கு மகாலட்சுமியின் அருள் கிடைக்கவில்லேயே!" என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே.

## ரஸிகனும் கவிச்செல்வியும்

இப்படி யிருக்கையில், ஒரு நாள் ஆண்டிலும் அறிவிலும் ஒருங்கே பழுத்த பெருங் கிழவி—தமிழ்ச் செல்வி—கலேத்தாய், அச்சபையிலே திடீரென்று தோன்றினள். " கிழவியின் ஆசையைப் பாருங்கள்! இவளுக்கு எப்படிப் பொற்கிழி கிடைக்கும்?" என்று பரிகாசமாகவும் இரக்கமாகவும் சபையிலிருந்தவர்களில் பலரும் தங்களுக்குள்ளே மெள்ளப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆனல் பிரபுவோ உருவத்தைக் கண்டு இகழாது, அந்த நரை மூதாட்டியை விரைந்து

போய் உபசரித்து, "வந்த காரியம் என்ன?" என்று அன்போடு வினவினுன்.

அப்பொழுது கிழவி, அரசனது அகக் கருத்தை நன்குணர்ந்து கொண்டு, பொன்னரசியையும் பொற் கிழியையும் நோக்கி ஒரு வெண்பாவை உருக்கமான குரலில் பாடினுள்

ஆர்த்தசபை நூற்ருெருவர்; ஆயிரத்தொன் ரும்புலவர்;
வார்த்தை பதினு யிரத்தொருவர், —பூத்தமலர்த்
தண்டா மரைததிருவே! தாதாகோ டிக்கொருவர்;
உண்டாயின் உண்டென்(று) அறு.

பாட்டைக்கேட்டதும், கிழவி ஔவையார் என்று அரசனுக்கும் பிறருக்கும் தெரிந்துவிட்டது "ஔவை என்ற கலைக்கொடியில பூத்த கவி மலரல்லவா? இதன் அழகும் மணமும் இப்படித்தானே யிருக்கும்!" என்று சபையிலிருநதவர்களெல்லாம ஒருங்கே சந் தோஷம் அடைந்தார்கள்.

## கவிமலரின் மணமும் அழகும்

அனபர்களே! இக்கவிமலரின் மாட்சி வாசகர் களாகிய உங்களுக்கும் இனிது புலனுகும். நூற்றில் ஒருவரே, நிறைந்த சபைகளில நிமிர்ந்து நின்று பேசக் கூடியவரெனறும், அவ்வாறு பேசுகிறவர்களிலும் அறிவுத் திறமையோடு விஷயஙகளை உய்த்துணர்ந்து பேசும் புலவா ஆயிரததில் ஒருவரே யென்றும், அப் புலவருள்ளும பதினுயிரத் தொருவரே வார்த்தையின் நயம் தெரிந்த கவிப் புலவரென்றும், ஔவையார் கூறுகிருரல்லவா?

இவ்வண்ணம் தாம் வெளியிட வந்த உண்மை யின் ஒரு பகுதியை வெளியிட்டதும், ஔவையார்

அரசனை விளித்துப் பேசாது, "பூத்த மலர்த் தண் தாமரைத்திருவே!" என்று அழகுத் தெய்வமாகிய லட்சுமி தேவியை விளித்துப் பேசத் தொடங்கி, முடிவாகத் தாம் கண்டுகொண்ட உண்மையின் அந்தம்று பகுதியையும் வெளியிடப் புகுந்து, "தாதா கோடிக் கொருவர்" என்று ரஸிக மணியான அரசனின் வள்ளன்மையைச் சிறப்பித்துப் பேசுகிறார்.

இவ்வாறு தாம வெளியிட்ட முழு உண்மைக்கும அந்த அழகுத் தெய்வத்தையே சாட்சியாக்கி, 'உண் டாயின் உண்டென்று அறு" என்று பொற்கிழியை நோக்கிக் கூறி முடிக்கிறார்.

இப்பாட்டு ஔவையாரின் அழகிய மனோ பாவத்தை அப்படியே இன்னோசை பெற்று வரும் செஞ்சொற்களில் உருக்கமாக வெளியிட்டு, அரசனுள் ளத்தையும் அங்கே கூடியிருந்த புலவர்களின் உள்ளங் களையும் ஒருங்கே வசீகரித்தது.

ஔவையார் இக்கவிமலரைப் பரம ரஸிகனான அரசனுக்கு ஒரு கையுறையாக வழங்கினார். இதைக் கவிதா தேவியின் பிரசாதமென்று பெற்றுக்கொண்ட அரசனும் பெரு மகிழ்ச்சியோடு பொற்கிழியை ஔவையாருக்கே அளித்தான்.

இப்படியெல்லாம ஔவையார் தமது பாடல் களில சுய சரிதம் கூறுவதோடு, சில கற்பனைக் கதை களையும் பாடி வைத்திருக்கிறார். இனி இத்தகைய கதைகளில் ஒன்றைக் கேட்போம்.

## VIII. பாட்டி சொல்லும் காதற் கதை

குன்றுகளுக்கிடையே ஒரு குளம். குளக் கரையி லும் குன்றுகளிலும் செடிகளும கொடிகளும் மரங் களும் அடர்ந்து காடாயிருக்கின்றன. "குன்றுகளின் அமைப்பிறகுத் தகுந்தபடி குளம வளைந்திருககிறது" என்று ஔவையார், தாம் நாடகத் திறமையோடு சொல்லப் போகும் ஒரு கதைககுக் களம் அமைத்துக் கொளளுகிறார்.

### காட்சி—I

இப்படிப்பட்ட குளக் கரையிலே ஒரு நாள் ஒரு வன் ஒருத்தியைச் சந்திததான். அதற்குமுன் எத் தனையோ கண்களைப் பார்த்ததில்லையா ? அந்தக் கண் கள் சாதாரணமாய்ப் பாரக்கும் கண்களாகத் தானே யிருந்தன ? எனவெ பாரத்ததும் மறந்து விட்டான். ஆனல் இந்தக் கண்களிலே எனன ஒளி ; என்ன பிறழ்ச்சி ; என்ன திகைப்பு ! பார்க்கப் பார்க்க, இவ னுடைய ஆசையைப் போல் நீண்டு கொண்டே யிருந்தனவாம். "இவ்வளவு அற்புதமான கண்களை இதற்குமுன் பார்த்ததேயில்லை !" என்று தோன்றி யது. இக் கணகளை மறக்கவே முடியவில்லை.

### காட்சி—II

பகலிலும் அநத நினைவுதான். இரவிலும அதே நினைவு. இப்படிப்பட்ட ஆசையே இவனுக்கு அவள் தந்த சம்மானம் முதல் முதல் காதலியைச் சந்தித்த இடம் பரிசுத்த ஸ்தலமாகி விட்டது. அநத இடததை அடிக்கடி போய்ப் பார்ப்பான, "அங்கே மீண்டும் சந் திக்கும் பாக்கியம் கிடைக்குமோ ?"—என்று ஆனல் அவளை மாததிரம சநதிக்க முடியவில்லை.

## காட்சி—III

ஆசை முற்றி முதிர்ந்து கொண்டே போகிறது. நாளடைவில் காதலியின் தரிசனமும் சுலபமாகி விடுகிறது! அந்தப் புண்ணிய ஸ்தலத்திற்குப் போக வேண்டியதுதான். அங்கே ஓரிடத்தில் மட்டுமா? எத்தனை இடங்களில் தரிசனம் அளிக்கிருள்? குளமும் அவளாகவே தெரிகிறது; குன்றும் அவளாகவே தெரிகிறது! காடும அவள்; செடியும் அவள் தான்! "அற்புதம்! ஆம்; அவள் தநத ஆசையால் நிகழும் அறபுதம் இது!" என்று காதலன் தெரிந்து கொளளுகிருன்.

யோகிகளுக்கு உலகமெல்லாம் கடவுள் மயமாவதுபோல, காதலனுக்கு அந்த ஸதல்மெஙகும் காதலி மயமாகவே யிருக்கிறது!

இப்படி ஔவையார், "அந்தக காதலனையும், அவன் அவ்வளவு ஆசையோடு தரிசித்துக் கொண்டிருக்கும் கண்களையும் முகத்தையும இதோ பாருங்கள்!" என்று காட்டி விடுகிருள்.

ஆடும் கடைமணி வைவேல
அசதி அணிவரை மேல,
நீடும் கயற்கண்ணி யாளதந்த
ஆசை நிகழ்த் தரிதால்.
கோடும் குளமும், குளத்தரு
கேஙிற்கும் குனறு களும்,
காடும் செடியும் அவளாகத்
தோன்றுமஎன் கண்களுக்கே!

[கடைமணி - ஆராயசிமணி. வை - கூரமை. அணிவரை - அழகான மலே. கயற்கணணி - கயலமீன போல பிறழும கணகளை

யுடையவள். நிகழ்த்தரிது - சொல்ல முடியாது. கோடும - வளைந திருக்கும.]

அந்தக் குளமும், அருகே நிற்கும குன்றுகளும், காடும் செடிகளும்கூட, காதலனுக்குக் காதலி பிரத்தி யட்சமாவதுபோல, நமக்கும பிரத்தியட்சமாகிக் காதலியின சாயலாக மாறுகின்றன. பாட்டின சொல்லோடும பொருளோடும் ஓசை இன்பமும் கலந்து, காதலின் வசீகரமான சித்திரத்தைப் பூர்த்தி செய்கிறது. "காடும் செடியும் அவளாகத் தோன் றும் என கண்களுக்கே!" என்பது காதலின முதிர்ந்த நிலை. இதைக் 'காதல் - யோகம்' என்றே சொல்ல லாம.

இந்தக் காதலா யார? ஔவையாரின் மானஸ புத்திரர்தாம். காதலனும் மானஸ புத்திரன்; காதலி யும் மானஸ புத்திரியே! இந்த அழகான பாட்டை நமது தமிழ்ப் பாட்டியின் அருமைக் குழந்தைகளில ஒன்றாக மதிக்கலாம். ஆம்; கவிஞருக்குக் கவிதை தானே 'செல்லப் பிள்ளை?'

## IX. ஔவையாரும் அசதிக் கோனும்

இப்பாட்டு ஔவையார், அசதி என்ற இடையர் தலைவன்மீது அன்பு பாராட்டிப் பாடிய அசதிக் கோவை என்ற பிரபந்தத்திலே நமக்குக கிடைத்திருக் கும் பாடல்களில ஒன்று. இந்தக் கோவை பாடியது குறிதது ஒரு கதை வழங்குகிறது.

ஔவையாா காட்டு மார்க்கமாய் ஓர் ஊருககுப் போகும்போது வெயிலால் வேர்த்து வாடிப் பசியால் வருந்தினர். இடை வழியிலே ஓர் ஆட்டிடையன் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தான் அவன், தான்

சாப்பிடுவதற்குக கொணர்ந்துள்ள கஞ்சியை அன் போடு இவருககுக் கொடுதது, " அம்மா ! என்னைக் காட்டிலும் உமக்கு இது அவசியம்" என்று சொலலி உபசரிததானும். அந்தக் கடும பசிக்கு அந்தக கஞ்சி தேவாமிர்தமா யிருந்தது.

பசி தீர்ந்ததும் ஔவையார், " அப்பா, உன் பெயர் என்ன ?" என்று கேட்டார். அவனிடம் அன் பும கருணையும் தான் இருந்தன ; அறிவு கொஞ்சமும் இல்லையாம. அவனுக்குத் தன பெயரும மறநது போய் விட்டதால, இவர் கேள்விக்கு அசதி (அதா வது, மறதி) எனறு பதில் சொன்னானும்.

" உன் ஊர்ப் பெயரையாவது சொல்லு " என்று ஔவையார் கேட்க, அதுவும மறந்த ஆட்டிடையன், " நான் பிறந்த ஊரில் ஐநது வேல் உண்டு " என்று மாததிரம ஞாபகப்படுத்திச் சொன்னானும். ஔவை யார 'ஐவேல் அசதி' என்று ஊரையும் பெயரையும் கறபித்துக்கொண்டு அவன மேல் கோவை பாடினா ராம. அசதிக்கோன்மீது ஔவையார் அசதிக் கோவை பாடிய பின்பு அதிரஷ்டத்தால் அவன் அரச னுகி விட்டானும். ஔவையார கல்வி கற்பித்து அவனை அறிவாளியாக்கினா என்றும் சொல்வதுணடு.

கதை கற்பிதம்தான் ! அசதிககோனை உண்மை யாகவே ஓர் அரசன் அல்லது பிரபு என்று கருதலாம. இவனைப் படைத் தலைவன் என்று கருதுவோரும் உண்டு.

## X. தமிழ்க் காதலும் நாட்டுக் காதலும்

இத்தகைய காதற் கதை சொல்லும ஔவையார் மணஞ் செய்து கொளளவில்லையென்றும், பரதேசியாகத் திரிந்து யோகினியாகக காலம் கழித்தாரென்றும் சொல்லுகிறார்கள். எனினும் இவா வாழக்கை அன்பு மயமாகவும் காதல் மயமாகவும் கழிந்தது. குடும்பத்திற்குரிய காதல தமிழக் காதலாகவும் தமிழ் நாட்டுக் காதலாகவும் பரிணமித்தது. இவர் அன்போ தமிழ் நாட்டுத் தலைவர்களையும் ஏழை ஜனங்களையும் ஒருங்கே சகோதரர்களாகப் பாவித்து மகிழ்நதது; அவர்களுடைய சுக துக்கங்களைப் பஙகிட்டுக் கொண்டது.

வேழம் உடைத்(து) மலைநாடு, மேதக்க
சோழ வளநாடு சோறுடைதது,—பூழியர்கோன்
தெனனாடு முத்துடைதது; தெண்ணீர் வயல்-தொண்
நன்னாடு சான்றோா உடைத்து [டை

[வேழம - யானை. உடைதது - உடையது. மேதகக - மேனமையான பூழியா - (இஙகே) பாணடியா.]

என்று தமிழ் நாட்டின் பிரதானமான பகுதிகளைப் பாடுகிறவருக்குப் பொதுவாகத் தமிழ நாட்டு அபிமானமும், சிறபபாகத் தொண்டை நாட்டபிமானமும் உணடு என்று ஊகிககிலாம்

சோழ வளநாடு சோறுடைத்து
தண்ணீரும் காவிரியே, தார்வேந்தன் சோழனே!
[தாா - மாலை.]

என்று சோழ மன்னனையும் பாராட்டியிருககிறார்.

அரசனுயாவு குடிகளின உயர்வையே பொறுத்ததெனபதும், குடிகளுக்குப் பணி செயவதே அரசாங்

கத்தின் கடமை யென்பதும் ஔவையார் கொள்கை. எனவே சோழ ராஜனுக்கு மகுடாபிஷேகம் ஆன போது வித்வ ஜனஙகளெல்லாம் அரசனை வாழ்த்த, ஔவையார் 'வரப்புயர' என்று ஏழை ஜனங்களையும், அவர்களுடைய முக்கியமான தொழிலான உழவை யும் வாயார வாழ்த்தினராம்.

வரபபுயர நீருயர்ந்து நெல்லுயாந்து குடி உயரும் என்றும், குடி உயரக் கோல் (அதாவது, அரசாங்கம்) உயருமஎன்றும் வியாக்கியானமும் செய்தாராம். செங்கோல் பிடித்த அரசர்கள் தேர் வேந்தர்கள் என் ருல், ஏர் பிடித்த குடியானவர்கள் ஏர் வேந்தர்கள் அல்லவா?

## பொருட் செல்வமும் அருட் செல்வமும்

விவசாய பூமியாகிய நமது நாட்டில்,

"ஏரும் இரண்டுளதாய், இல்லதஞே விதயுளதாய்,
நீர்அருகே சேர்ந்த நிலமுமாய;—ஊருக்குச்
சென்று வர அணித்தாயச, செய்வாரும் சொற்கேட்
என்றும் உழவே இனிது [டால்,

என்பது ஔவையார் அபிப்பிராயம

உள்ளத்தில் உயர்ந்த லட்சியஙகளை வளாத்துக் கொண்டே உழவுத் தொழிலிலும், வேறு இன்றி யமையாத தொழில்களிலும் ஈடுபடுகிறவாகள், "தனைப்பிறர் ஏவாமல் உண்பதே ஊண்" என்ற தமது கொள்கைக்கு இணங்கி அடிமை - வாழக கையை வெறுத்துச் சுதந்திர வாழக்கை வாழமுடியும என்று கருதுகிருர் ஔவையார் அபபடியாஞல்தான் நல்வழியில் பொருள சம்பாதிக்கவும முடியுமாம்.

# IX. பாட்டியார் தமிழ் விருந்து

அறிவுச் செல்வத்தைப் பெரிதும் பாராட்டும ஔவையார் தாமே ஒரு சிறந்த அறிவுச் செல்வராக விளங்கி, வள்ளல்களுக்கும் பிறருக்கும் தமது பொக்கிஷத்திலிருந்து வாரி வாரி வழங்கினர். அரசர்கள பிரபுக்கள குடியானவர்கள் என்றும, செல்வர்கள் ஏழைகள் என்றும் வித்தியாசம் பாராட்டாமல் எல்லாருக்கும் தாராளமாகத் தமிழ் விருந்து செய்தார்

## நாலு கோடிப் பாடல்

ஒரு சமயம் சோழ மன்னன் தன்னுடைய சமஸ்தான வித்வான்களை அழைத்து, "நீங்கள் நாளை உதயத்துக்கு நாலு கோடிப் பாடல் பாடி வரவேண்டும்!" என்று கட்டளையிட்டானும். "அத்தனை பாடல்கள் எப்படிப் பாடுவது?" என ஒன்றும் தோன்றாமல் வித்வான்கள் ஏங்கிப்போனார்கள்.

அந்த வழியாகப் போன ஔவையார் நடந்ததை விசாரித்து அறிந்துகொண்டு, "இவ்வளவுதானா? இதோ ஒரு நொடியில் பாடித் தருகிறேன்; கவலைப் படவேண்டாம், புலவர்களே!" என்று தைரியம் சொல்லி,

மதியாதார் முற்றம் மிதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி உறும்;

'உண்ணீர்; உண் ணீர்'! என்றே ஊட்டாதார் தம் [மனையில்
உண்ணாமை கோடி உறும்;

கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார் தம்மோடு
கூடுவதே கோடி உறும்;

கோடானு கோடி கொடுப்பினும, தன்னுடை நாக்
கோடாமை கோடி உறும்

"பொருள் என்றால் என்ன?" என்ற கேள்விக்கு ஒளவையார் 'தீவினை விட்டு ஈட்டல் பொருள்'—அதாவது, தீவினையை விட்டுச் சம்பாதிப்பதுதான் பொருள்—என்று பதில் சொல்லுகிறார். கெட்ட வழிகளில தேடும் பொருள் 'பொருள்' அன்று; 'இருள்' தான!—என்பது குறிப்பு.

ஆனால் பொருள் தேடுவதற்கு விவசாய முயற்சியோடு வியாபார முயற்சிகளும் வேண்டுமென்ற கருத்தை அமைத்து, "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்றும் புத்திமதி சொல்லுகிறார்.

பொருட் செலவத்தைக் காட்டிலும அறிவுச் செல்வம் சிறந்தது எனபதையும், பொருள-வறுமையைக்காட்டிலும் அறிவு - வறுமை கொடியதென்பதையும் ஒளவையார் வற்புறுத்துகிறார்.

> வெண்பா இருகாலில் கல்லானை, வெள்ளோலை
> கண்பார்க்கக் கையால எழுதானைப்—பெண்பாவி
> பெற்றாளே பெற்றாள, பிறர்நகைக்கப பெற்றாளே!
> [இருகாலில் - இரண்டு தடவையில.]

என்று கூறுவதைக் கேளுங்கள்.

அறிவுச் செல்வம் என்றால் ஒளவையாருக்குத் தமிழச் செல்வந்தானே. ஒளவையாரின் தமிழ்க் காதலே இவரது தமிழ் நாட்டுக் காதலுக்கும் உயிர் நிலையாக இருந்ததென்று கருதலாம. தமிழ்க் காதல் என்ற பாச பந்தத்தைககொண்டே தமிழரசாகளையும் தமிழ மக்களையும இவர் ஒன்றுபடுத்த விரும்பினாரெனறும் கருதலாம்.

[உறும - அடையும. உண்ணீா - சாபபிடுஙகள். நா - நாகக்கு. கோடாமை - கோணுமலிருததல ; (இஙகே) நடுநிலைமை தவறிப் பேசுவதை ஒழிததிருபபது.]

என நாலு கோடிப் பாடலும் பாடிக் கொடுததுவிட் டாராம்.

இக்கதை ஔவையாரின் அறிவுத திறமைககுச் சான்ருவதுபோல், இப்பாடடு இவருடைய உலகியல்-அறிவுக்குச் சான்ருகிறது

## XII. பாட்டியின் உலகியல் - அறிவு

உண்மையில், இவருடைய உலகியல் - அறிவு அல்லது லௌகிக ஞானமே இவர் கவிச செல்வத் திற்கு மூலதனமாகிறது.

உடையராச் சென்றககால், ஊரெல்லாம சுற்றம் ;
முடவராக் கோலூன்றிச் சென்றக்கால், சுற்றம்
உடையானும் வேறு படும்

என்ற பாட்டையும் கேளுங்கள்.

பொருள் உடையவராய்ப்போனல், போன போன ஊர்களிலெல்லாம் "நான் இன்ன உறவு" என்று சுற்றிக்கொள்வார்களாம், ஆசாமிகள் வந்து வந்து. பொருள முதலான வசதிகளில்லாமல் புறப் பட்டாலோ, உண்மையான உறவினனும் வித்தியாச மாய்க காட்டிக்கொள்வானும். "முடவனுக்குக் கோல்தான் உறவு" என்ற பழமொழியையும் ஔவை யாககு என்றே சொலவதுண்டு

இப்படிப்பட்ட போலி மனிதர்களைப் பார்ததிருப் பவர், போலி வித்வான்களையும் பார்த்திருக்கிருர்.

விரகர் இருவர் புகழ்வாரும் வேண்டும் ;
விரல்நிறைய மோதிரமும் வேண்டும் ,-அரையில் ஒரு

பஞ்சேனும் பட்டேனும வேண்டும்; அவர்கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று

[விரகர் - சாமர்த்தியமுள்ளவர்.]

என்ற பாட்டிலே, ஆடையாபரணங்களால் பகட்டிக் கொண்டு 'சபாஷ்' போட இரண்டு ஆசாமிகளையும் கூலிக்குத திட்டப்படுத்தி வைத்துவிட்டு வரும் போலிக கவிராயர்கள் பரிகசிக்கப் படுவதுபோல், அந்த வலையில் அவ்வளவு லேசாக விழுந்துவிடும் மூட சிகாமணிகளான பிரபுக்களும் குறிப்பாய்ப் பரிகசிக் கப்படுகிறார்கள்.

ஆனால கற்றோர்முன் பலிக்குமா, படாடோபங் களும் வீண் கூச்சலகளும்? ஆடம்பர வித்வான் களுக்கு ஔவையார்,

காணாமல் வேணதெல்லாம கத்தலாம்; கற்றோர்முன்
கோணாமல் வாய்திறக்கக் கூடாதே!—நாணாமல்
பேச்சுப்பேச சென்னும், பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னும் கிளி

என்று இடித்து அறிவு கொளுத்தப பார்க்கிறார்.

உண்மையான சாமாத்தியமுள்ளவர்கள் வீண் கர்வம் கொள்ளமாட்டார்கள்.

வானகுருவி யின்கூடு, வல்லரக்குத் தொலகறையான்,
தேன், சிலமபி, யாவர்க்கும செய்யரிதால ,-"யாம்பெரிதும்
வலலோமே!" என்று வலிமைசொல வேண்டாங்காண்;
எலலார்க்கும ஒவ்வொன்(று) எளிது

[சிலமபி - சிலந்தி.]

எனபது அவர்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும்— என்கிறாா ஔவையார். கல்விமான்களும் கலா நிபுணர் களும்,

சித்திரமும் கைப்பழக்கம, செந்தமிழும் நாப்பழக்கம;
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்

என்று அறிந்து அடங்கியிருப்பார்கள்—என்றும் சொல்லுகிறார்.

ஒளவையாரின் தமிழறிவு கேவலம் ஏட்டுப் படிப்பன்று, "மேலாடை நாகரிக"மாகிய போலி உலகியல்—அறிவைப் பரிகசிக்கும் ஒளவையார் உண்மையான உலகியல் - அறிவைத் தமது மெய்யறிவுக்கு இன்றியமையாத அடிப்படையாகக் கொண்டார்.

## XIII. கல்வியும் கவிதையும்

ஒரு நாள் ஒளவையார் ஓர் அரசனிடம், ஒரு பாட்டைப் பாடிக்கொண்டிருக்கும்போது, அருமையாக நெய்யபட்டிருந்த ஆடை ஒன்றை அவன் பார்த்துக் கொண்டே கொஞ்சம் பராக்காக இருந்துவிட்டான். அப்போது இவர் பளிச்சென்று,

நாற்றுப்பத் தாயிரம் பொன்பெறினும், நூற்சீலை
நாற்றிங்கள் தன்னில் கிழிந்துபோம்,—மாறலரைப்
பொன்றப் புறம்கண்ட போரவேல் அகளங்கா !
என்றும கிழியா(து)என் பாட்டு !

[நாற்றிங்கள் - நாலு மாசம. மாறலா-சத்துருக்கள். பொன்ற- அழிய. புறம்கண்ட - தோறகடித்த. அகளங்கா - களங்க மற்றவனே.]

என்று பாடிக் கவிதையின் அழியாத அருமை பெருமைகளை வற்புறுத்தினாரம. "என்றும் கிழியாது என் பாட்டு" என்ற வாக்கிலே தன்னம்பிக்கைதான் எப்படி ஜொலிக்கிறது, பாருங்கள் !

## தமிழ்ச் சுவையும் கவிதாதாகமும்

இவர் கவிச் சுவையையும் தமிழச் சுவையையும் மற்றச் சுவைகளுக்கெல்லாம் மேலாக மதித்தார். 'செந்தமிழ் நாடு' என்று அந்த நாளில் சிறப்பாகச் சொல்லப்பட்ட பாண்டிய நாட்டிலே அரசனும் ஜனங்களும் மனம் ஒத்துத் தாய மொழியை வளர்த்து வந்ததைப் பெரிதும் பாராட்டி ஔவையார் அரசனை நோக்கி, "பாண்டிய! நின் நாட்டுடைத்து நல்ல தமிழ்" எனறு குதூகலமாகச் சொன்னர். இத்தகைய பாஷாபிமானம் ஔவையாருக்குக் கவிதா தேவியின் மீதுள்ள பகதிக் காதலை விசேஷமாக வளர்த்துவிட்டதென்று ஊகிக்கலாம்.

பொதுவாகக் கல்வித் தெய்வத்தின் மீதுள்ள பக்தியும, சிறப்பாகத் தமிழத் தெய்வத்தின்மீதுள்ள பக்தியும் சோந்து,கவிதா தேவியின்மீது இவருக்குளள விசேஷ பக்திக்கு வளர்ப்புப் பண்ணையாக அமைந்ததென்று ஊகிப்பதறகு இவர் பாடிய 'அசதிக் கோவை' என்ற நூலிலுள்ள பின்வரும் பாட்டும் ஒரு சான்று தருகிறது :

அற்றுரைத் தாஙகிய வைவேல்
அசதி அணிவரைமேல்,
முற்ரு இளநகை எவ்வாறு
செனறனள், முதுதமிழநூல்
கறருர் பிரிவும்கல லாதார்
இணக்கமும, கைப்பொருளொன்(று)
அறருர் இளமையும் போலே
கொதிக்கும் அருஞ்சுரமே?

[வை - கூாமை. அணிவரை - அழகிய மலை. முறரு இளநகை - (இஙகே) இளம பிராயததுப் பெண. சுரம - பாலைவனம.]

காதலி காதலனோடு நடந்து சென்ற அந்த வனம 'முத்தமிழ நூல் கற்ருர் பிரிவு' போலவும், கல்லாதார சினேகம் போலவும கொதிக்கிறதாம்.

## கல்வியின் முடிவான நோக்கம்

கல்வியும் கவிதையும் ஞான மார்க்கத்திலும ஔவையாருக்கு உயர்ந்த லட்சியத்தைச் சுட்டிக் காட்டின ஞானமும் கலவியும் தானமாகவும தவமாகவும் கனிந்தால், மோட்சம் தானே வழி திறந்து காட்டும் என்கிருர். இத்தகைய கல்வியைக் குறித்தும், இதன் விளைவுகளைக் குறித்தும் ஔவையாா,

ஒன்ருகக் காண்பதே காட்சி, புலனஐந்தும்
வென்ருன்தன் வீரமே வீரமாம்;—என்ருனும்
சாவாமல் கற்பதே கல்வி; தனைபபிறர்
ஏவாமல் உண்பதே ஊண்

என்று எவ்வளவு அழகாகவும் உண்மையாகவும் பாடியிருககிருர்!

"காடும் செடியும அவளாகத் தோன்றும் என் கண்களுக்கே!" என்று காதலன் கூற்ருகப் பாடியவர், "ஒன்ருகக் காண்பதே காட்சி!" என்றும் பாடுகிருர். காதலர் காட்சியும பக்தர் காட்சியும் ஸாராம்சத்தில் ஒன்றுதானே?

"பேரறிவு ஒன்று திரை மறைவிலே இருநது கொண்டு உலகததை ஆட்டிவைக்கிறது. அந்தச் சுத்த அறிவின் காதல் - நாடகமே உலக வாழக்கை. அநதச் சுத்த அறிவாகிய பேரறிவை நோக்கிக் காதலின்பம் செலுததப்பட்டால், அதுவே பக்திக் காதலாகிப பேரின்பம் ஆகும" என்பது ஔவையாரின் நமபிக்கை.

இத்தகைய ஆஸ்திக புத்தியோடு கூடிய ஔவையார் மேலே சொன்ன வெண்பாவிலே, "பன்மையிலும் ஒருமை" என்ற வேதாந்தக் காட்சியைக் காட்டுவதும், இந்திரிய ஜயம் பண்ணும் வீரத்தையே வீரமாகக் கௌரவிப்பதும், சோற்றுக் கவலையால் சுதந்திரத்தை இழக்கலாகாதென்று வற்புறுத்துவதும், கல்விப் பயிற்சியின் முடிவான நோக்கமாயிருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்.

இப்படிப்பட்ட உயர்ந்த கொள்கைகள் ஔவையாரின் கல்வியையும் கவிதையையும் குணாதிசயத்தையும் உருவாக்கி யிருக்கவேண்டும்; இவரது அன்பையும் அறிவையும் ஒருங்கே பண்படுத்தி மேலும் மேலும் கனியச் செய்திருக்கவேண்டும்.

## XIV. ஔவையாரின் அரசியல் ஞானம்

சோழ ராஜதானியாகிய உறையூரிலே, சோழ மன்னனுடைய யாக மண்டபத்திலே, ஒரு சமயம் சேரனும் பாண்டியனும சோழனோடு மனம் ஒத்து வீற்றிருந்தார்கள். தமக்குள்ளே அடிக்கடி விரோதங் கொண்டு போர் செய்துகொண்டிருந்த தமிழ வேந்தர் மூவரும் ஒருங்கே கூடியிருப்பதைக் கண்டதும், ஔவையார் ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தார்.

### ஒற்றுமையின் அவசியம்

இவர் அவர்களை நோக்கி, "அந்தணர் இந்திரிய ஜயத்தோடு வளர்த்த 'முத்தீ' என்று சொல்லப்படும் மூன்று தீயும்போல ஒற்றுமையோடு அழகாக விளங்கும் அரசர்களே! இப்படி நீங்கள் கூடி வாழ்வதால் உண்டாகும் பெருமையையும், பொதுஜன நன்மையையும் என்னால் அளந்து சொல்ல

முடியுமோ? உங்கள் வாழுநாள் நட்சத்திரத்தைக் காட்டிலும், மழைத் துளியைக் காட்டிலும் பெருகு வதாக!" என்று வாழ்த்தினர்.

"ஒன்ருகக் காண்பதே காட்சி" என்ற வேதாந்த உண்மையைத் தமிழ் நாட்டின அரசியல் - துறையி லும் ஔவையார கண்டுகளிக்க விரும்பினா என்று தோன்றுகிறது. ஆனல் இந்த அரசியல் - ஞானம் தமிழரசர்களின் உள்ளத்திலே ஊன்றி வளர்ந்ததாகத் தெரியவில்லை

இந்த ஞானந்தான், அரசர்களை வாழ்த்தியது போல் ஔவையாரை ஏழை மக்களோடும் கலந்து உறவாடச் செய்து, அவர்களையும் வாழத்திப் பாடும் படி தூண்டியது; அவர்களுடைய க்ஷேமமும, நல்ல வீர மன்னர்களுடைய க்ஷேமத்தைப்போல நாட்டுக்கு இன்றியமையாததென்றும் கருதச் செய்தது.

## பொதுஜனங்களே முக்கியமானவர்கள்

அரசர்களின் க்ஷேமத்தைக் காட்டிலும் குடி களின் க்ஷேமமே மேலானதென்றும், அரசாங்கத்தின் க்ஷேமத்திற்குக் குடிகளின் க்ஷேமமே அடிப்படை யானதென்றும் ஔவையார் கருதினர். இதற்கு, அரசனை வாழத்தாமல் இவா "வரப்புயர" என்று வாழ்த்தியதும் ஒரு சான்ருகுமல்லவா? அரசர்களின் தோழி அதிக அளவில் ஏழைகளின் தோழியாகவும் இருந்தார.

ஒரு சமயம் பாண்டியன் தன் அரண்மனை வாச லில் பொற்கிழி கட்டி வைத்துச் சிறந்த பாட்டு ஒன றுக்கு அதிலுள்ள பொனனைக கொடுப்பதாக விளம் பரப்படுத்தி யிருந்தானும். அப்போது ஔவையார் கோலும கையுமாகத தோன்றி,

வையகம எல்லாம வயலாய், வானோ
தெய்வமா முகடு சேரி யாகக்
காணமும் முத்தும் மணியும் கல(த்து)ஒரு
கோடானு கோடி கொடுப்பினும், ஒருநாள்
ஒருபொழு(து) ஒருவன்ஊண் ஒழிதல் பார்க்கும்
நேர்நிறை நிலலா(து) என்னும் மனனே!

[வையகம - உலகம முகடு - உச்சி. காணம - பொன.]

என்று கம்பீரமாய்ப் பாடினாராம்; இரக்கமே பொன் முத்து மணி முதலான செல்வங்களுக்கெல்லாம் மேலானதென்ற தம் கொள்கையை வெளியிட்டாராம். இந்தக் கொள்கைககும "ஒன்றாகக் காண்பதே காட்சி" என ற வேதாந்த ஞானமே ஔவையாருக்கு வழி காட்டி யிருக்கவேண்டும்.

இத்தகைய ஞானததோடு கூடிய பாட்டியாரின தங்கமான உள்ளம், எளியார் வலியார் எனற வித்தியாசமில்லாமல் எல்லாருக்கும் அருள சுரந்து உபதேசங்கள் செய்து வாழ்ததிய வண்ணமாயிருந்தது. ஜாதி விஷயத்திலும் ஔவையார் உயர்வு தாழவு கருதவில்லை; ஆண் பெண் என்ற வடிவு-வேறறுமை பற்றியும் உயர்வு தாழவு கருதவில்லை.

தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நல்வாழவு வாழவேண்டுமென்பதும், ஏழைகளுக்கு உதவி செய்வதே அரசர்களுக்கும் செல்வர்களுக்கும் முக்கியமான கடமையாகுமென்பதும் ஔவையாருடைய அரசியல் - ஞானத்தின ஸாராம்சமென்று சொல்லலாம்.

# XV. பழுத்த அறிவு

அன்பிற் சிறந்த ஔவையார் அறிவுத் திறமையி லும் பழுத்து விளங்கினர். ஒரு சமயம் ஓர் அரசன தன் சமஸ்தான வித்வானும் வேருெரு புலவரும் தொடர்ந்து வர உல்லாசமாக உலாவி வந்தானும். அப் போது ஒரு தெருத் திண்ணையில் இரண்டு கால்களே யும் நீட்டிக்கொணடிருந்த ஔவையார் அரசனைக் கண்டதும் ஒரு காலை மடக்கிக்கொண்டாராம் அரு கில் வநத புலவரைப பார்த்தவுடனே மற்றைக காலை யும் மடக்கிக்கொண்டாராம். அவர்களைத தொடர்நது வந்த சமஸதான வித்வானைக் கண்டவுடன் இரண்டு கால்களையும் நீட்டிக் கொண்டாராம். அரசன் செங் கோல் செலுத்தி வந்ததால் அவனுக்கு ஒரு காலையும், நிறைநத அறிவும் பணிவுமுள்ள புலவருக்கு இரணடு காலையும், மடக்கி மரியாதை செய்ததாகவும, கர்வத் தோடு வீண் பெருமை பாராட்டியவரை மதியாமல் இரண்டு காலையும் நீட்டியதாகவும் ஔவையார் சொன்ஞராம்

“பழுத்து நரைத்திருக்கிருயே சுவாமி இருக்கும் இடத்திற்கு நேரே இப்படிக் காலை நீட்டிப் படுத் திருக்கலாமா?” என்று காஜீத்த பூசாரிககு, “ஐயா, தயவு செய்து சுவாமி இல்லாத இடத்தைக் காட்டும், வழி நடந்து களைத்துப்போன என் கால்களை நீட்டிக் கொள்ள!” என்று ஔவையாா பதில் சொன்னதாக வழங்கும் கதையிலும், மேலே சொன்ன அறிவுத் திறமையைக் காண்கிருேம.

கைலாசத்தில் சிவ ஸந்நிதானததிலே ஔவை யார் கால் நீட்டி உட்கார்நததாகவும், உமாதேவியாா,

"இது தகுதியோ ?" என்று கேட்க, "அம்மையப்பரா கிய நீங்கள் இல்லாத இடம் இல்லையே! கிழவியாகிய நான் பழக்கத்தால்தானே இப்படி உட்கார்ந்தேன்; கர்வத்தால் செய்யவில்லையே! நீங்கள் இருப்பது இங்கு மாத்திரம் தானோ?" என்று விநயமாக ஔவை யார் பதில் சொன்னதாகவும், இந்தக் கதையை மாற்றி வழங்குவதுமுண்டு.

## XVI. சங்கப் புலவர்களின் கர்வ பங்கம்

மகா விதவான்களான சங்கப் புலவர்கள்கூட ஒரு காலத்தில் வீண் கர்வம் கொண்டிருந்ததாகவும், ஔவையார் அவர்களைத் தமது அறிவுத் திறமையால் கர்வ பங்கம் செய்து அந்தப் பெருந் தமிழ்ப் புலவர் களுக்கும் மெய்யறிவு புகட்டியதாகவும், ஒரு கதை வழங்குகிறது. முதல் முதல் பாட்டியார் தமமுடைய ஐந்து விரல்களையும் குவித்துக் காட்டினாராம்; பிறகு அவற்றை மூடிக் காட்டினார்; அடுத்த க்ஷணமே கொஞ்சம் திறந்து காட்டினார்; அப்பால் சுட்டு விரல் ஒன்றை மாத்திரம் நீட்டினார்; கடைசியாக ஐந்து விரல்களையும் அகலத் திறந்தார்! அந்தக் குறிகளின் பொருள் அந்தப் புலவர்களுக்கு விளங்கவில்லையாம். உடனே ஔவையார்,

> ஐயம் இடுமின்; அறநெறியைக் கைபபிடிமின்,
> இவ்வளவே னும்அன்னம் இட்(டு)உண்மின் -தெய்வ
> ஒருவனே என்றும் உணரவல் லீரேல், [ம்
> அருவினைகள் ஐந்தும் அறும்

என்று ஒரு வெண்பாவைச் சொல்லித் தம்முடைய குறிப்பை வெளியிட்டு, அவர்களுக்கு நீதி நெறியை யும், சமய நெறியையும் சுருக்கமாக உபதேசித்தா ராம்.

## XVII. நாவற் பழ விருந்து

"அடா தம்பி! ஆயாசமா யிருக்கிறது; கொஞ்சம் நாவற் பழம பறித்துப் போட மாட்டாயா?" என்று வேண்டிக் கொண்டாள் கிழவி, மரத்தின மேலிருந்த ஒரு பையனைப் பார்த்து அவன் கொஞ்ச தூரத்தில் எருமை மாடுகளை மேயவிட்டு, அந்த மரத்தின் மேல் சாவகாசமாக இருந்து பழம் தின்று கொண்டிருந்தான் கிழவியின குரலைக் கேட்டதும் கீழே நோககிக் குறும்பாகச சிரித்துக்கொண்டு, "அடி பாட்டி! உனககுச் சுடுகிற பழம் வேணுமா? சுடாத பழம் வேணுமா?" என்று கேட்டானும். ஒளவையார் திகைத்துப் போனா. சிறிது ஆலோசித்து ஒன்றும தோன்ருமல், "அப்பா, சுடாத பழங்களே வேணும!" என்ருர்.

### பையன் கற்பித்த பாடம்

உடனே சிறுவன் ஒரு கிளையைப் பிடிததுப் பல மாய்க குலுக்கினன் அதிலிருந்து கனிந்த பழங்களும் காய்களும் தரையில் உதிர்ந்தன. ஒளவையார் கனிந்த பழங்களைப் பொறுக்கி அவற்றில ஒட்டிக் கொண்டிருந்த மணலை வாயால் ஊதினர். பையன மறுபடியும் சிரித்துக் கொண்டே, "கிழவி! சுடுகிற பழத்தைக் கீழே போட்டுவிடு: வாய் வெநது போகும்!" என்று பரிகசித்தான். காயைச் சுடாத பழமென்று பையன சாதுரியமாகக குறிப்பிட்டது அப்போதுதான் ஒளவையாருக்குத் தெரிந்ததாம்.

ஒளவையாரது பழுத்த அறிவு அப்படியே ஆகாசத்திலிருந்து பழுத்து இவாமீது உதிர்ந்திடவில்லை. அது இவரது நீண்ட—அனுபவம் நிறைந்த—வாழ்

வின் ஸாரமான கனிதான என்பது இக்கதையின உடபொருள்.

## ஔவையாரும் முருகக் கடவுளும்

" ஒரு சிறு விஷயம தெரியாமல் மாட்டுக்காரப் பையனுக்கு நாம் தோற்றுப் போனோமே !" என்று ஔவையார எண்ணி வெட்கம் அடைந்து, " கருங் காலிக் கட்டைக்கு நாணாத கோடாலி, கதலித் தண் டுக்கு நாணுமே !" என்ற பாடத்தையும், " எல்லாருக் கும ஒவ்வொன்று எளிது " என்ற பாடத்தையும் படித்துக் கொண்டாராம கல்வியறிவில நிகரற்றவர் களும் அதிகம் கற்று விட்டதாய்க் கர்வப் படலாகா தென்றும் கற்றுக் கொண்டாராம். திடீரென்று அந்த மலைக்காட்டிலே எருமைகளும் பையனும் மறைந்து, வேலும மயிலும முருகனும் துணையாகவந்து காட்சி தந்தனராம.

தாம் அளித்த நாவற்பழ விருநதிற்கு எதிர் விருந் தொன்றை எதிர்பாரத்தாராம் முருகக் கடவுள். ஔவையாருக்குக கூட அக்கடவுள் இலவச விருந்து அளிக்க விரும்பவில்லை ! ஔவையார் உலகியல - அறிவில் ஒரு பாடம் கற்ருரென்ருல், செந்தமிழ்ப் பரமாசாரியரான முருகக்கடவுளும் நீதி விஷயமாகச் சில பாடங்களைத் தமிழ்க் கிழவியிடம் படித்துக் கொள்ள விரும்பினுராம்.

## அரியது

" இது முருகன் திருவிளையாடல " என்று கருதிய ஔவையார், தம்மைக் கொண்டு அப்பெருமான் தமி ழில் நீதி பாடுவிக்க விரும்பினுரென்று தெரிந்து வினய மாக,

அரியது கேட்கும்
தனிநெடு வேலோய்

என்று தொடங்கி, மோட்ச வாசலுக்கு இராஜ வழி இன்னதென்று தெளிவாகக் காட்டினாராம்.

## இனியது

'அரியது' தெரிந்து கொண்ட பின், 'இனியது' இன்னதென்றும ஔவையார் வாயிலாக அறிந்து கொள்ள விரும்பினாராம் முருகக் கடவுள். உடனே ஔவையார் "ஏகாநதம் இனிது" என்றும், ஏகாந்தத்தில கடவுளைத் தொழுவது அதைக காட்டிலும் இனிதென்றும், அதைக காட்டிலும அறிவுடையோர் சேர்க்கை (ஸத் ஸங்கம்) இனிதென்றும பாடினாராம. ஸத் ஸங்கம் இல்லாவிட்டால்தான் ஏகாந்தம இனிதென்ற கொள்கையை ஔவையார் வற்புறுத்தியிருப்பது, நமது தமிழ்ப் பாட்டி சமூக வாழ்க்கையின் பொருளையும் பயனையும் உணாந்திருக்கிறுரென்று காட்டுகிறதல்லவா?

## கொடியது

இப்படி 'இனியது' தெரிந்து கொணடபின், "கொடியது எது?" என்று கேட்டாராம் முருகப் பெருமான். அதறகு விடையாக,

கொடிது, கொடிது,
வறுமை கொடிது

என்று தொடங்கி, "அன்பிலலாத பெண்மை தான் கொடிய நோயைக் காட்டிலும் கொடியது" என்று பொருள்படப் பாடி முடித்தாராம் ஔவைப் பிராட்டியார்.

## பெரியது

கடைசியாக, முருகக் கடவுள் 'பெரியது' இன்னதென்பதையும் அறிய விரும்பினாராம். 'உலகம் பெரிது' என்று தொடங்கி உலக நாதனை சிவபெருமானே பெரியவரென்று சித்தாந்தம் செய்து,

இறைவரோ, தொண்டர
உள்ளத்(து) ஒடுக்கம.
தொண்டர்தம் பெருமை
சொல்லவும் பெரிதே!

என்று மெய்யன்பர் பெருமையைத தம்முடைய சித்தாந்தத்தின் சிகரமாக வற்புறுத்தினர் ஔவையார.

## தமிழரின் பொது உள்ளம்

இப்படிபபட்ட பாடல்களில் லோகோபகாரமாக முக்கிய நீதிகளை ஔவையார் சுருக்கிச் சொல்லி யிருக்கிறாரென்பது தமிழர்களின் அபிப்பிராயம். பொதுவாக நீதியை வற்புறுத்தும் பல பாடலகளையும் ஔவையார் பாடல்களென்று கருதுவது தமிழர்களுக்கு வழக்கமாகி விட்டது "அறஞ்செய விரும்பு" முதலான அறவுரைகளையும் ஔவை - வாகவென்று சொல்லுகிறார்கள். நீதி வாக்கியஙகளான பழமொழிகளைக் கூட ஔவையார் அமைத்திருகக வேண்டுமென்று சாதாரண ஜனஙகள் நம்புகிறார்கள். தமிழ்ப் பொது மக்களின் நீதி நிறைந்த—அறிவு பழுத்த - அருமையான பொன்னுள்ளத்திறகே நம் முன்னோர் 'ஔவை' என்று பெயரிட்டார் போலும்!

# XVIII. பாட்டியார் காட்டும் நீதிச் சுரங்கம்

ஔவையாரின் பொன்னுள்ளம் உண்மையில், ஒரு பொற் சுரங்கம. தமிழர்களின் பொதுவுடைமை யான இப்பொற் சுரங்கத்தை நீதிச் சுரங்கமென்றே சொல்லி விடலாம். உதாரணமாக, ஔவையாரின் **மூதுரை** என்ற பழைய சிறு நூலை எடுத்துக் கொள் வோம.

இந்தச் சிறு நூலிலுள்ள முப்பது பாடல்களில், பல அருமையான நீதிகள் சாமானிய உபமானங்களால் எளிய நடையிலே கூறப்பட்டிருக்கின்றன. ஔவை யாருடைய லௌகிக ஞானத்திற்கும், சிறிய விஷயங் களையும் அற்பமென்று இகழாமல் ஊன்றி நோக்கும் மனப்பான்மைக்கும், மூதுரை ஒரு நல்ல சாட்சி யென்று சொல்லலாம்.

## தென்னை

தென்ன மரம சாதாரண மரம்தான், நமமுடைய கண்களில. ஔவையார் கண்களிலோ, அடியால் உண்ட நீரைத் தலையாலே கொடுக்கும் மரம் சாதா ரணமானதனறு: நன்றியறிவுக்கு ஒரு நல்ல ஒப்புமை.

## பால்

பாலைக் காய்ச்சக காய்ச்ச அதன் சுவை குறைய வில்லை; அதிகப்படுகிறது - என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனால ஔவையார், "கறநத பால போலிருககும் மேன்மக்கள் வறுமையிலே காய்ந்தா லும் அப்படியே அந்தக காய்ச்சிய பால்போல் இருப் பார்கள்!" எனகிறார்.

## அல்லி

நீர் பெருகி உயர உயர அல்லியும் உயர்ந்து உயர்ந்து தோன்றுகிறதல்லவா? இதே அல்லி, " தாம் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என்று வாய் திறந்து ஔவையாருக்கு உபதேசம் செய்ததாம்.

## நெல்லும் புல்லும்

நெல்லுக்கு இறைத்த நீர் புல்லுக்கும் கசிந்து போவதை நாமுந்தான் பார்த்திருக்கிறோம். ஔவை யாரோ இதிலிருந்து, " நல்லவருக்கு ஏற்படும் நன்மை மற்றவர்களுக்கும் பயன்படும் " என்று கண்டுபிடித் திருக்கிறார்.

## கடலருகே நல்ல ஊற்று

கடலுக்கு அருகே நல்ல தண்ணீருள்ள ஊற்றைக் கண்டிருக்கிறோம். இந்த ஊற்று, " உடல் சிறியர் என்று மகான்களை இகழலாகாது " என்பதை ஔவையார் மூலமாக நமக்கும் போதனை செய்கிறது.

## மரமும் தியாகமும்

இப்படியெல்லாம் சாதாரணத் தமிழர்கள் பார்த்துப் பழகியிருக்கும் பொருள்களையும் காட்சிகளை யும் கொண்டே பெரிய பெரிய நீதிகளையும் உண்மை களையும் காட்டுகிறவா, " தியாகமே உயர்ந்த நெறி " என்பதை எவ்வளவு சாதாரணமான உபமானத்தி லிருந்து காட்டிவிடுகிறார், பாருங்கள் :

சாந்தனையும் தீயனவே செய்திடினும், தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் :—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்.

[சாந்தனையும - சாகுமளவும. ஆந்தனையும - ஆகுமளவும. குறைக்குந்தனையும - வெட்டுமளவும.]

இப்படிப்பட்ட நீதிகளை ஔவையாரின் பல பாடல்களிலும் காணலாம். இவையெல்லாம் இவர் வாழ்க்கையிலே விளைந்து, அறிவிலே பழுத்து, வாக்கிலே வந்து விழுகின்றன. ஔவையார் கல்வி கற்ற முக்கியமான பள்ளிக்கூடம் எபபடிப்பட்ட தென்பதையும் இவரது நீதிச் சுரங்கம் வெளியிடுகிறது.

## XIX. வாக்கும் வாழ்க்கையும்

ஔவையார் நன்ருகக் கற்றவர்தான்; ஆனல் ஏடுகளைக காட்டிலும் இயற்கையையும் மனித உள்ளத்தையும், அந்த உள்ளத்தை நல்ல வழியில் இயக்கத் தக்க தர்மத்தையும் அதிகமாகக் கற்றவரென்று ஊகிககலாம்.

ஔவையார் அறிவில் சிறந்தவர்தான்: எனினும் எல்லோரிடத்திலும் அன்பு கொண்டு சாமானியர்களிடத்திலிருந்தும் பல விஷயங்களைக கற்று அறிந்திருக்க வேணடும். அவர்களை நல்வழிப்படுத்தவே, வாக்குத் தெய்வம் தமக்கு வாக்கை அருளியதாக நம்பியிருக்க வேண்டும்.

இவருடைய வாககிலிருந்தே இவருடைய வாழ்ககை எப்படி யிருந்திருக்க வேண்டுமென்பதையும் ஒருவாறு ஊகித்துககொள்ளலாம.

### நாடோடி

“அமமா, நீ எங்கே யிருந்து வருகிருய்?” என்று கேட்ட சோழ மன்னனை நோக்கி ஔவையார்,

> கால்நொந்தேன், நொந்தேன; கடுகி வழிநடநதேன;
> யான்வந்த தூரம் எளிதனறு:—கூனல
> கருந்தேனுக்(கு) அண்ணுந்த காவிரிசூழ் நாடா!
> இருந்தேனுக்(கு) எஙகே இடம?

என்று பதில் சொன்ஞராம்.

ஊரும் இல்லை, காணியும் இல்லை, உறவும் இல்லை; நாடோடி. ஆனால் இந்த நாடோடிக்கு நாடெல்லாம் உறவு. தமிழகத்தில் இவர் சஞ்சாரம் செய்யாத நாடுமில்லை, காடுமில்லை என்று சொல்லலாம். இராஜதானிகளில் சஞ்சரித்ததுபோல், இவர் குக்கிராமங்களிலும் சஞ்சரித்திருக்க வேண்டும். நாகரிக மக்களை அறிந்திருந்ததுபோல், அநாகரிக ஜனங்களையும் அறிந்திருந்தார் என்று சொல்லலாம். பண்டிதரோடு பழகியவர் பாமரர்களோடும் பழகி அவர்களையும் உயர்த்த முயன்றாரென்றும், அரசர்களுக்கு வேண்டியவராயிருந்தவர் ஏழைகளோடு ஏழையாய்ப் பழகி உறவாடுவதிலும் விசேஷ விருப்பம் கொண்டிருந்தாரென்றும் ஊகிக்க இடமுண்டு.

பெரும்பாலும் ஏழைகளோடு பழகிக் கூழைக் குடித்து எளிய வாழ்க்கை வாழ்ந்த ஔவையார்,

உப்புக்கும் பாடிப் புளிக்கும் ஒருகவிதை
ஒப்பிக்கும் என்தன் உளம்.

என்று தம்முடைய மன நிலையை வெளியிட்டிருக்கிறார். ஏழைகளுக்குப் பணி செய்து அவர்களுக்கு அறிவு புகட்டுவதும், நீதி காட்டுவதும், ஆறுதல் அளிப்பதுமே ஔவையார் வாழ்க்கையின் தனிப் பெருநோக்கமாயிருந்திருக்கவேண்டும். இவர் வாக்கின் பிரதான நோக்கமும் இதுவே.

ஔவையார் பாடல்கள், கேவலம் மோனைகளும் பிராசங்களும் நிறைந்த சொல்லடுக்குகளல்ல. இவை நீண்ட வாழ்க்கையின் நிறைந்த அனுபவங்களான உண்மை - மணிகளின் பொக்கிஷம். சில பாடல்களை இவர் வாழ்க்கைச் சுரங்கத்திலிருந்து கிடைக்கும் அபூர்வ மணிகளாகவும் மதிக்கலாம்.

நம முனனோர் இவர் வாக்கைத் தெய்வ வாக்காக மதித்தார்கள். இவரையும் ஒரு சாமானிய ஸ்திரீயாக மதிக்கவில்லை; கலைமகளின் அவதாரமென்று தீர்மானித்துவிட்டார்கள். இவர் வாழ்க்கையைக் குறித்தும் வாக்கைக் குறித்தும் பல கதைகள் கற்பனை செய்து விட்டார்கள். இக்கதைகளில் சில, அழகான கதைகள்; ஔவையார் வாக்கைப்போல் இக்கதைகளும் நம் மதிப்பிற்கு உரியன.

## XX. என்றும் பாட்டிதான்

எத்தனையோ கதைகள் தட்டிய போதிலும், எத்தனையோ ஊகங்கள் ஊகித்த போதிலும், ஔவையாரின் பெயர்கூட நமக்குத் தெரியாது! 'ஔவை'யென்ற பதத்திற்கு, 'தாய்' 'பாட்டி' 'கிழவி' என்று பொருள். வயதிலும் அனுபவத்திலும் அறிவிலும் முதிர்ந்து, குழந்தைகளைத் திருத்தும தாயபோல் நல்ல போதனைகள செய்து பொதுமக்களைத் திருத்த முயன்றதால், இவரை ஜனங்கள் 'ஔவை' என்று அழைத்திருக்கக் கூடும். இந்தப் பெயர், ஔவையாருக்குப் பெற்றோர் இட்டிருந்த பெயரையும் நாளடைவில் மறைந்துபோகும்படி செய்துவிட்டது.

### ஒருவரா? பலரா?

எப்போதும் பாட்டியாராகத்தான் ஔவையார் நம் கண்முன் வருகிறார். அமிர்த மயமான ஒரு நெல்லிக் கனியை உண்டு சாகாமல் இவர் நெடுங்காலம் வாழ்ந்தா ரென்ற கதையை முனனமே சொல்லி விட்டோம்.

காரைக்காலம்மையார் பேயுருவைச் சிவபெருமானிடம் வேண்டிப பெறறதுபோல், ஔவையாரும், இளமையையும் சாமானிய உலக இன்பங்களையும்

விரும்பாமல் சிவ கிருபையால் கிழவி - வடிவம அடைந்தாரென்று கூறுவாரும் உண்டு.

இப்படிப்பட்ட கதைகளெல்லாம பல வேறு காலங்களில் பல வேறு ஔவையாாகள்—அதாவது, தமிழ்ப் பாட்டிமார்—கவி பாடக்கூடியவர்களாக இருந்திருக்கக் கூடுமென்பதை மறை பொருளாகக் காட்டுகின்றன என்று ஊகிக்கலாம.

## XXI. கோவில்

ஔவையாா கோவில் ஒனறு தஞ்சை ஜில்லாவில் திருத்தருப்பூண்டித் தாலுகாவில் இருக்கிறது. அங்கும் ஔவையார் விக்கிரகம் கிழவி - வடிவமாகவே இருககிறது.

ஔவையார் என்ற ஆசசரியமான கிழவி, தமிழ இலக்கியத்திலும் தமிழர் உள்ளத்திலும் ஆச்சரிய மாகக் கோவில்கொணடிருக்கிறார். இவரை பபற்றிக் கேளவிப்படாத தமிழனே இல்லையென்று சொல்ல லாம்

சிறுவர்களும்—மாடு மேய்க்கும் சிறுவர்களும் கூட—ஔவைப பாட்டியாரைக் குறித்துக் கேள்விப பட்டிருக்கிறார்கள்; ஔவையாரைப்பற்றிய சில கதைகளையாவது சொல்லிக் கொணடிருப்பார்கள். தமிழ் மக்கள்—ஆண்களும் பெண்களும்—ஔவை யார் வாக்கைப பொன்போல, மணிபோலப் போற்று கிறார்கள்.

"ஔவை பெற்றாள் ஆயிரம் பிள்ளை" என்று சொல்வதுண்டு: 'ஆயிரம' என்றால் அனந்தம் என்று பொருள். அதாவது, இவர் பாடியதாக வழங்கும் பாடல்கள் ஆயிரம். ஆனால் இந்தப் பிள்ளைகளுக்கெல் லாம் தாயார் ஒருவராய் இருக்கமுடியுமா? முடியாது என்று துணிவதற்கு விசேஷ ஆராய்ச்சியும் வேண் டுமோ?

## ஔவைக் கிழவி

ஔவைக் கிழவி நம்கிழவி,
அமுதின் இனிய சொற்கிழவி;
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் பழங்கிழவி; 1

நெல்லிக் கனியைத் தின்றுலகில்
நீடு வாழும் தமிழ்க்கிழவி;
வெல்லற் கரிய மாந்தரெலாம்
வியந்து போற்றும ஒருகிழவி; 2

கூழுக் காகக் கவிபாடும்
கூனக் கிழவி: அவளுரையை
வாழும் வாழ்வில் ஒருநாளும்
மறவோம, மறவோம், மறவோமே. 3

முற்றும்

பி. ஸ்ரீ எழுதிய

# ஆண்டாள்

(ரிடையர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ்
**திவான் பகதூர் வி. பாஷ்யமையங்கார்**
சிறப்புரை கொண்டது.)

## பொருளடக்கம்


1. ஆண்டாள் கும்மி
2. ஆண்டாள் வைபவம்
3. பெரியாழ்வார் நந்தவனம்
4. கனவா? தீர்க்கதரிசனமா?
5. நந்தவனத்தில் ஒரு தெய்வமலர்
6 தெய்வமலரை அர்ப்பணம் செய்தது
7. பிள்ளைப் பருவம
8 பூரிப்பும் கவலையும
9. சூடிககொடுத்த சுடர்க்கொடி
10. ஆழ்வார் கனவு
11. காதலின் வளர்ச்சி
12. ஆண்டாள் நோன்பு
13. நோன்புக காட்சிகள
14. ரஸமான பேச்சு
15. நப்பின்னைப்பிராட்டியாரை அழைப்பது
16. நோன்பின் பயன்
17. கல்யாணப் பேச்சு
18. செலவத் தோழிகள
19. அல்லல் விளத்த பெருமாள்
20. ஆண்டாள் கனவு
21. கனவும் கல்யாணமும்

**அநுபந்தம்**

(i) மார்கழி நோன்பு
(ii) திருப்பாவை
(iii) அரும்பதவுரை